Registered as a Newspaper in Ceylon * விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily

மலர் 9
இதழ் 354
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க கார்த்திகை 7 ஷஃபான் 20 வியாழக்கிழமை [23-11-67]

எழில் மிகுந்த
முத்து வளையல்
பிளாஸ்டிக் வளையல்
ரப்பர் வளையல்
நவீன முத்துமாலை
முடிமயிர்
ஜீவா
பாங்கிள்ஸ் ஸ்ரோர்ஸ்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# இலங்கையின் ரூபாய் மதிப்பு 20 சதவீதம் குறைக்கப்பட்டது

## அரசியல் வட்டாரங்களில் ஆதரவும் எதிர்ப்பும்

கொழும்பு, புதன்

இலங்கையின் நாணய மதிப்பு குறைக்கப்பட்டுவிட்டது. இலங்கை நாணயத்தின் மதிப்பு 20 சத விகிதம் குறைக்கப்பட்டுவிட்டது.

பிரிட்டன் தனது பவுண் ஸ்டர்லிங்கின் மதிப்பை 14.3 சதவிகிதமாகக்குறைத்ததைத் தொடர்ந்து இலங்கைநாணயத்தின் மதிப்பைக் குறைப்பதா இல்லையா என்பது பற்றி மந்திரிசபை ஆறு தடவைகூடி ஆராய்ந்தது. நான்கு நாட்கள் இலங்கையிலுள்ள வங்கிகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டிருந்தன.

இலங்கை நாணயத்தின் மதிப்பை இருபது சத விகிதம் குறைப்பதென அரசாங்கம் செய்துள்ள முடிவுக்கு எதிர்ப்பும் ஆதரவும் கிளம்பியுள்ளது.

இலங்கையின் ஒரு ரூபாயின் மதிப்பு இனி வெளிநாடுகளில் எண்பது சதமாக இருக்கும்.

ரூபாயின் மதிப்பைக் குறைப்பதற்கு மந்திரி சபையிலேயே இரு மந்திரிகள் வன்மையாக எதிர்த்தனராம்.

பிரிட்டனின் பவுண் ஸ்டரிலிங் மதிப்புக் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து இலங்கைநாணயத்தின்மதிப்பையும் குறைக்கவேண்டுமென்று சர்வதேச நாணய நிதி இலங்கை அரசாங்கத்துக்குச் சிபார்சு செய்திருந்தது. நாணய மதிப்பை 30 சத விகிதம் இலங்கை குறைக்கவேண்டுமென்றும் அது சிபார்சு செய்திருந்தது. ஆனால் நாணயத்தின் மதிப்பை30 சதவிகிதம் குறைக்க முடியாதென்றும் அவ்விதம் குறைத்தால் பல கஷ்டங்கள் நேரிடுமென்றும் இலங்கைஅரசாங்கம் தெரிவித்து இருபது சத விகிதத்துக்கு மேல் குறைக்கமுடியாதென்றும் சர்வதேச நாணய நிதிக்கு அறிவித்திருந்தது.

நாணய மதிப்பு குறைக்கப்பட்டது பற்றி விவாதிப்பதற்காக ஜனப்பிரதிநிதிகள் சபை இம்மாதம் 22-ந் திகதி கூடுமென்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

யாழ். நவீனசந்தை

## விரைவில் 'டெண்டர்' கோரப்படும்

### 5-ந் திகதி பிரதமர் அத்திபாரக்கல் நாட்டுவார்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணத்தில் கட்டப்படவிருக்கும் நவீன சந்தைக்கான 'டெண்டர்' விரைவில் கோரப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

நவீனவசதிகளுடன் கூடிய சந்தை ரூபா 35 லட்சம் செலவில் கட்டப்படவிருப்பதாகவும் முதலில் 8 லட்சம் ரூபா செலவில்ஒருபகுதி கட்டப்படுமெனவும்அறியப்படுகிறது. இந்தப் பகுதி பழைய பஸ் நிலையத்திலிருந்து இப்போது புஸ்தகக் கடைகள்இருக்குமிடம்வரை கட்டப்படவிருக்கிறது. இப்பகுதிகளிலுள்ள கடைக்காரர்களுக்குத் தற்காலிகமாக வேறு இடம் கொடுக்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தையின் அடுத்த பகுதிகள் பின்னர் தொடர்ந்து கட்டி முடிக்கப்படுமெனவும் தெரிகிறது.

ரூபா 8 லட்சம் செலவில் கட்டப்படும் சந்தையின் முதல் பகுதிக்கான அடிக்கல்லை பிரதமர் திரு. டட்லி சேனநாயகா அடுத்த மாதம் 5-ம் திகதி நாட்டிவைப்பார். பிரதமர் விசேஷ விமானத்தில் அன்று யாழ்ப்பாணத்துக்குவிஜயம்செய்து அன்றே கொழும்பு திரும்புபவிருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் கட்டப்படவிருக்கும் நவீன சந்தை 7 பகுதிகளாகக் கட்டப்படவிருக்கிறது.

அரிசி

## முழுத் தொகையையும் சீனா அனுப்பும்

கொம்பனித்தெரு, புதன்

இவ்வருட இறுதிக்குள் இலங்கை சீனாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி நமக்குத்தரவேண்டியமுழுத் தொகை அரிசியையும் தருவதற்கு சீனா முயற்சித்துக் கொண்டு இருப்பதாகத் தெரியவருகிறது. இம்மாதத்தில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின்படி இரண்டு லட்சம் மெட்றிக் தொன் அரிசியை இவ்வருட இறுதிக்குள் தர சீனா ஒப்புக் கொண்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கை அரசாங்கம் பர்மிய அரசாங்கத்துடனும் தாய்லாந்துஅரசாங்கத்துடனும் முறையே ஒவ்வொரு லட்சம் தொன்அரிசி வாங்க ஒப்பந்தம் கைச்சாத்திட்டதும் பர்மிய அரசாங்கம் பலவித காரணங்களைக் கொண்டு ஒப்புக்கொண்ட முழுத்தொகை அரிசியையும் திருப்பித்தரமுடியாத நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதும் அறிந்ததே.

தாய்லாந்துசீான் தர ஒப்புக்கொண்ட தொகைஅரிசியைஅனுப்புமென எதிர்பார்க்கப்படுகிறது. ஒவ்வொருவருடமும் ஒப்பந்தம் செய்ததின்படி முழுத் தொகைஅரிசியையும் பூரணமாகக்கொடுத்துதவும்நாடு சீனா என்பது குறிப்பிடத்தக்கது.

### சுன்னுகம் பட்டினசபை தேர்தல்

சுன்னுகம், புதன்

சுன்னுகம் பட்டினசபையின் புதிய தேர்தல் விரைவில் நடைபெறவிருக்கிறது. [illegible] நியமனப்பத்திரங்கள் டிசம்பர் 10-ந் திகதி ஏற்றுக் கொள்ளப்படவிருக்கின்றன.

## நாணய மதிப்பு குறைப்பில் அவசரம் ஏன்?

### உடுப்பிட்டி எம். பி. எதிர்ப்பு

கொழும்பு, புதன்

இலங்கை நாணயத்தின் மதிப்பை இருபதுசத வீதமாகக் குறைப்பதென்று இங்கை அரசாங்கம் செய்துள்ள முடிவைத் தாம் வன்மையாக எதிர்க்கப்போவதாக உடுப்பிட்டி எம். பி. யும் தமிழ்க்காங்கிரஸ் உபதலைவருமான திரு. எம். சிவசிதம்பரம் இன்று தெரிவித்தார்.

நாணய மதிப்புக் குறைப்பினுல் சாதாரண வருமானமுள்ள பொதுமக்களே பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்று திரு. சிவசிதம்பரம் தெரிவித்தார்.

பிரிட்டன் தனது ஸ்டர்லிங் மதிப்பைக் குறைத்ததனுல் நாமும் உடனடியாக நமது நாணயத்தின் மதிப்பை அவசரப்பட்டுக் குறைத்திருக்கத் தேவையில்லை. ஆறுமாதகாலமாவது நிலைமையைக் கவனித்து பின்னர் ஒரு முடிவைச் செய்திருக்கலாம் என்று திரு. சிவசிதம்பரம் கூறினுர்.

## வவனியா இன்ஸ்பெக்டர் மீது சுப்ரீம் கோர்ட்டில் விசாரணை

வவனியா, புதன்

வவனியாவில் பொலிஸ் இன்ஸ்பெக்டராகக் கடமையாற்றிய திரு. பெரேரா என்பவருக்கெதிராகத் தொடரப்பட்ட வழக்கொன்றை விசாரணைசெய்த வவனியா மாஜிஸ்திரேட் வழக்கை சுப்பிரீம் கோர்ட்டுக்கு நேற்று பாரப்படுத்தினுர்.

பார்வதி என்னும் பதினேழுவயதான இளம்பெண் வவனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யச் சென்றிருந்த சமயத்தில் இன்ஸ்பெக்டர் பெரேரா அப்பெண்ணை காட்டுக்குள் கொண்டுசென்று கெடுத்ததாக இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இவ்வழக்கை விசாரணை செய்த வவனியா மாஜிஸ்டிரேட்எதிரியை சுப்பிரீம் கோர்ட்டில் விசாரணைக்கு நிற்குமாறு உத்தரவிட்டார்.

## 20 ஆயிரம் தொன் அரிசி இங்கு வருகிறது

கொம்பனித்தெரு, புதன்

இந்தமாத இறுதியில் இலங்கை தாய்லாந்திடமிருந்தும், சீனுவிடமிருந்தும் இருபதினுயிரம் தொன் அரிசியைப் பெறும் என உணவு இலாகாவைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தாய்லாந்திலிருந்து10ஆயிரம் தொன் அரிசியை ஏற்றிக்கொண்டுவரும் கப்பலும் சீனுவிலிருந்துஇதே தொகையான அரிசியை ஏற்றி வரும் கப்பலும் இம்மாத இறுதியில் கொழும்புத்துறைமுகத்தைவந்தடையுமெனஎதிர்பார்க்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கையும் சீனுவும் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கைக்குத் தரவேண்டிய அரிசியை அனுப்பிவைக்க சீனு துரித நடவடிக்கை மேற் கொண்டுள்ளதாகவும் இருகப்பல் இலங்கைக்கான அரிசியை சீனத் துறைமுகங்களில்கள் இப்போது ஏற்றிக்கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நீர்கொழும்பில் பயிற்சி வகுப்பு

மானிப்பாய், புதன்

இலங்கையிலுள்ள சகல குருளை ஆசிரியர் ஆசிரியைகட்கும் டிசம்பர் 13-ந் திகதி தொடக்கம் 18-ந் திகதி வரை குருளை ஆசிரியர் தருசின்னப் பயிற்சி வகுப்பு நீர்கொழும்பில் நடைபெறவிருக்கின்றது. இப்பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புபவர்களுக்கான சகல ஏற்பாடுகளையும் யாழ் மாவட்ட குருளை ஆசிரியர். சங்கச் செயலாளர் திரு. உ. ந. தேவகடாட்சம் செய்து வருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

விற்பனைக்கு

காணிகள்
திருநெல்வேலி சந்திக்கருகாமையில், அரசினர் விறகு காலைக்கு அருகில் நாலரைப் பரப்பு காணி, வீடு கிணறு உட்படவும், இந்துவாலிபர் சங்கத்துக் கருகாமையில் தோட்டக்காணி பத்துப் பரப்பும் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு திருமதி. தி. விசுவலிங்கம், வைத்தியர் வளவு, அளவெட்டி வடக்கு. 2139

காணி
சாவகச்சேரி பருத்தித்துறை வீதியிலிருந்து முருகமூர்த்தி கோவிலுக்கு செல்லும் வீதியில் குடியிருப்பதற்கேற்ற 25 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. முற்றுகவோ அல்லது பிரித்தோ கொடுக்கப்படும். விபரங்கட்கு: இ. டா. சிவகுரு, புகையிரத நிலைய வீதி, சாவகச்சேரி. 2144

காணிகள்
அளவெட்டி கேணிக்கரை வைரவர் கோயிலுக்கு அருகாமையில் குடியிருப்புக் காணி தனிக் கிணறுடன் ஆறு பரப்பும் மல்லாகம் கும்பலையில் இருபத்திரண்டு பரப்பு வயற்காணி தனிக்கிணறுடனும் இருபாலை கிழக்கில் நாலுபரப்புக் குடியிருப்புக் காணி வீடு தனிக்கிணறுடனும் விற்பனைக்குண்டு. சி. சண்முகசுந்தரம், உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சமாசம், வல்வெட்டித்துறை. 2142

# பீடி புகையிலை: விவசாயிகள் கவலை

அளவெட்டி, புதன்
பீடிப்புகையிலையை விற்பனை செய்த விவசாயிகளுக்கு பலமாதங்கள் சென்றும் பணம் கிடைக்கவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலி- வடக்குப் பகுதியில் உள்ள விவசாயிகளிடம் ஆடிமாதத்தில் ஒரு லட்சம் பெறுமதியான பீடிப் புகையிலை கொள்வனவு செய்யப்பட்டதாகவும் இன்னும் பணம் வழங்காததால் விவசாயிகள் அடுத்து விவசாயம் செய்ய ஏற்ற பொருள்களை வாங்க முடியாதிருப்பதாகவும் தமது வாழ்க்கையை நடாத்துவதற்கு மிகக் கஷ்டப்படுவதாகவும் தெரியவருகிறது.

காங்கேசன்துறை

## நகரசபையாக்குவதற்கு பட்டினசபை ஆட்சேபம்

அளவெட்டி, புதன்
காங்கேசன்துறைப் பட்டினசபையுடன் தெல்லிப்பளை, மயிலிட்டி கிராமசபையின் சில பகுதிகளைச் சேர்த்து காங்கேசன்துறைப்பட்டினசபையை நகரசபையாக்குவதை ஆட்சேபிக்கும் தீர்மானமொன்று காங்கேசன்துறை பட்டினசபையில் நடந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது,

காங்கேசன்துறை பட்டின சபை உபதலைவர் திரு. சீனிவாசகம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தற்சமயம் நடைமுறையில் இருக்கும் 6 வட்டார எல்லைக்குள் இன்னும் பல வட்டாரங்களைக்கூட்டி முன்போல பட்டின சபையாக இயங்கவேண்டுமெனவும் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானத்தை 5-ம் வட்டார அங்கத்தவர் திரு. ச. சிவனடியார் பிரேரிக்க3-ம் வட்டார அங்கத்தவர் திரு, மு. திடவீரசிங்கம் ஆமோதித்தார்.

இத்தீர்மானத்தை காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்திற்கும், உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வத்திற்கும், உள்ளூர் ஆட்சி ஆணையாளர் ஆகியோருக்கும் சமர்ப்பிக்க பட்டின சபை அங்கத்வர் குழு ஒன்றை அனுப்புவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

---

## மாணவர் மன்றம்

உடுப்பிட்டி, புதன்
''மாணவர்கள் மன்றங்களை அமைத்து ஒற்றுமையாக இயங்குவது மகிழ்ச்சியளிக்கின்றது. இவ்வகை மன்றங்கள் கல்விசம்பந்தமான அறிவைப் பெருக்குவதற்கு உழைக்கவேண்டும்'' என்று நெல்லியடி மத்திய மகாவித்தியாலய உயர்தர மாணவர்மன்ற வருடாந்தக் கூட்டத்தில் பேசுகையில் கல்லூரி அதிபர் திரு. கே. சிவசிதம்பரம் கூறினார்.

இம்மாணவர்மன்ற புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:—

போஷகர் அதிபர் திரு. கே. சிவசிதம்பரம், காப்பாளர் ஆசிரியர் திரு, ஏ. சிவலிங்கம், பொதுப் பொருளாளர் ஆசிரியர் திரு. வ. கிவராசன், தலைவர் செல்வன் சி. அமிர்தலிங்கம், துணைத் தலைவர் திரு. வே. சுப்பிரமணியம், காரியதரிசி சைவப்புலவர் செல்வன் ச. திரவியம், துணைச்செயலாளர் செல்வன் குணகரன்[ தனாதிகாரி செல்வன் ஏ. இருதயதாஸ்.

செல்விகள் புவனேசுவரி, பொ. யோகேஸ்வரி, க. தவமணிதேவி, கே, கமலாதேவி, வை, அஞ்சனாதேவி, செல்வன் த. சுந்தரலிங்கம் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்,

## 'பொன் கந்தையா வீதி'

உடுப்பிட்டி, புதன்
நெல்லியடிப் பட்டின சபை எல்லைக்குட்பட்ட சகல வீதிகள், ஒழுங்கைகளுக்கும் பெயர்ப்பலகைகள் நட்டும் முயற்சியில் நெல்லியடிப் பட்டினசபை உத்தியோகஸ்தர்கள் துரிதமாகஈடுபட்டுள்ளனர். இதனைத்தொடர்ந்து 20வீதிகளுக்குப் பெயர்ப்பலகைகள் நாட்டப்பட்டுவருகின்றன. முன்பு ஸ்டாலின் வீதியென அழைக்கப்பட்டு வந்த நெல்லியடியிலுள்ள வீதியொன்றிற்கு 'பொன்.கந்தையா வீதி'யெனப் பெயரிடப்பட்டுள்ளது.

## தமிழ்மன்ற கூட்டம்

உடுப்பிட்டி, புதன்
வதிரி தமிழ் மன்றத்தின் வருடாந்தக் கூட்டம் திரு. ஆ. இரத்தினசபாபதி தலைமையில் நடைபெற்றது. புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர் திரு. ஆ. இரத்தினசபாபதி, செயலாளர் திரு. சி. க. இராசேந்திரன், உபதலைவர் திரு. ஆ, ம. வடிவேல், தனாதிகாரி திரு க. மருதவாணர்.

நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

---

## 'நெஸ்பிறே' உடைக்கப்பட்டு விநியோகம்

அனுராதபுரம், புதன்
பொதுமக்கள் மிக ஆவலுடன் எதிர்பார்த்த 'நெஸ்பிறே' இங்கு விநியோகிக்கப்பட்டது, வர்த்தகர்களுக்குக்கிடைத்த உத்தரவின் பேரில் இங்கு நெஸ்பிறே டின்கள் உடைக்கப்பட்டே பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

---

## புதைந்த பஸ் எடுக்கப்பட்டது

சாவகச்சேரி, புதன்
யாழ்ப்பாணம் - கேரதீவு வீதியில் மறைவன்புலவிற்கு சமீபத்தில் கடந்த புதன்கிழமை காலை வீதியைவிட்டு விலகி புதைந்து கிடந்த பஸ் ஏழு நாட்களின்பின் நேற்று வெளியே எடுக்கப்பட்டது. இதன் காரணமாக கடந்த ஏழுநாட்களும் நிறுத்தப்பட்டிருந்த பஸ் போக்குவரத்து சேவை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.


## விளம்பரம்

### ஏல விற்பனவு

யாழ்ப்பாணம் ஐக்கிய லாபநிதி திரு. எஸ். கனகசபை J. P. அவர்களிடம் 30-6-65 திகதிக்கு முன் வைத்த அடைவுநகைகளில் மீட்கப்படாதவற்றை 12-12-67 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அதேயிடத்தில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

S. இரத்தினசபாபதி J. P.
ஏல விற்பனையாளர்.

யாழ்ப்பாணம்
22-11-67. 338

கரைச்சிக் கிராமச் சபை,
கிளிநொச்சி

### கேள்விப்பத்திர அறிவித்தல்

கரைச்சிக் கிராமச் சபையின் நிருவாகத்திலுள்ள கிளிநொச்சிச் சந்தைக்குள் இருக்கும் ஆட்டிறைச்சிக் கடை இரண்டும், மாட்டிறைச்சிக் கடை ஒன்றும். பரந்தன் சந்தையிலுள்ள ஆட்டிறைச் கடை ஒன்றையும 1-1-68 தொடக்கம் 31-12-68 முடியும்வரையும் குத்தகை எடுத்து நடத்துவதற்கு அரக்கு முத்திரை இடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 1967-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 30-ம் திகதி மு. ப. 9-00 மணிவரைக்கும் கரைச்சிக் கிராமச் சபை அக்கிராசனராகிய என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் யாவும் இச்சபைக் காரியாலயத்தில் ரூபா 50/- கட்டியதன் பேரில் வழங்கப்படும் பத்திரங்களிலேயே நிரப்பி அனுப்பப்படல்வேண்டும். பத்திரங்கள் 29-11-1967-ம் திகதி நண்பகல் 12-00 மணி வரையும் வழங்கப்படும்.

மேற்கொண்ட விபரங்கள் சபைக் காரியாலயத்தில் வேலை நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

வீ. ஆனந்தசங்கரி,
20-11-67 அக்கிராசனர்.
339


## 'ஈழத்து இலக்கிய உலகிற்கு பெருமை தேடித் தந்தவர்'

### தாழையடி சபாரத்தினம் மறைவுக்கு யாழ். இலக்கியவட்டம் அனுதாபம்

மானிப்பாய், வியாழன்
''ஈழத்தின் பழம் பெரும் எழுத்தாளரும், நாடக ஆசிரியரும், பத்திரிகையாளருமான தாழையடி சபாரத்தினத்தின் மறைவு ஈழத்தமிழ் இலக்கியத்தின் மீதுபற்றுக் கொண்டவர்களையெல்லாம் அதிர்ச்சியடையச் செய்துள்ளது.

'கல்கி' நடாத்திய முதலாவது சிறுகதைப்போட்டியில் பரிசு பெற்றதன் மூலம் ஈழத்து இலக்கிய உலகிற்குப் பெருமையைத் தேடித் தந்த அன்னாரின் மறைவு ஈழத்து இலக்கிய உலகிற்கு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும், அன்னாரின் பிரிவால் வருந்தும் குடும்பத்தினருக்கு ஈழத்து எழுத்தாளர்களின் சார்பில் யாழ். இலக்கிய வட்டம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது.

இவ்வாறு யாழ். இலக்கிய வட்டத்தின் சார்பில் அதன் இணைச் செயலாளர் யாழ்வாணன் அனுப்பியுள்ள அனுதாபச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---

## பெற்ற அரிசியை இந்தியா தருகிறது

கொம்பனித்தெரு, புதன்
கடந்த ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் கடும் உணவுப் பஞ்சத்தினால் பாதிக்கப்பட்டிருந்த கேரள மக்களுக்காக இலங்கையிடம் கடனாக வாங்கிய அரிசியில் ஒருபகுதியைத்தற்பொழுது இந்திய அரசாங்கம் இலங்கைக்குத் திருப்பித்தந்துள்ளது.

இலங்கை கொடுத்த அதேரக அரிசியை இந்தியா தாய்லாந்திடமிருந்து பெற்றுக்கொடுத்திருக்கிறது. இந்தியா கடனாகப் பெற்ற மிகுதி அரிசியை இவ்வருட இறுதிக்குள் திருப்பித் தரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.


இப்பொழுது நடைபெறுகிறது
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி பி.ப. 2-30, மாலை -20, இரவு 9-30 மணிக்கு
பிளாஸா [வெள்ளவத்தை] கெப்பிட்டல் [கொழும்பு]
மைலன் [கொட்டாஞ்சேனை]
விஜயா [மட்டுநகர்] ஸ்ரீகிருஷ்ணா [திருமலை]
மற்றும் நாலு திரைகளில்
எம். ஜி. ஆரும், ஜெமினி கணேசனும்
முதல்முறையாக சேர்ந்து நடித்து வெற்றி கண்ட இன்பச் சித்திரம்!
கடமைக்கும் பாசத்திற்கும் நடுவே சிக்கித்தவிக்கும் ஒரு போலிஸ் அதிகாரியின் உணர்ச்சியூட்டும் சித்திரம்! 100 நாட்களுக்கு மேல் ஓடி தென்னகத்தில் பல்லாயிரக் கணக்கான மக்களின் பாராட்டைப் பெற்ற சித்திரம்.
மற்றும்



ஜெயலலிதா, ஜெய்ந்தி
நம்பியார், அசோகன்,
நாகேஷ், ஸ்ரீராம்,
மனோரமா,
பி. கே. சரஸ்வதி
நடித்த
தேவர் பிலிம்ஸ்
முகராசி
டைரக்ஷன் எம். ஏ. திருமுகம்
இசை: திரை இசைத்திலகம் கே. வி. மகாதேவன்

6-வது வாரம்
கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] லக்ஷ்மி [காரவெட்டி]
ஜெய்சங்கர் — ஜமுனா — நாகேஷ் — பேபி பத்மினி
நடித்த
ஏ. வி. எம்மின் ஜனாதிபதி பரிசுபெற்ற
குழந்தையும் தெய்வமும்

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எம். ஜி. ஆர் - சரோஜாதேவி
நடித்த
அன்பே வா

மனோகரா
யாழ்ப்பாணம்
Daily at
6-30 & 9-45 p.m.
Joy Mokerjee
ShairaBanu - Johnny Walker
in
DOOR KI AWAZ
[Hindi]
Daily 10-30a.m 4-30p.m.
BEAUTIES by NIGHT
(Adults Only)

REGAL JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 p. m.
Only
Dirk Bogarde
in
Doctor in Distress
In Colour


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே. வங்காளத்தின் காங்கிரஸல்லாத மந்திரிசபை கவர்னரால் நேற்று கலைக்கப்பட்டது

## ஐ. அ. கு. எண்ணெநிலையம் மீண்டும் நிறுவப்படுகிறது

### ரஷ்ய உதவியுடன்

கெயிரோ, நவ. 22

அண்மையில் இஸ்ரேல் தாக்குதலால் சேதத்துக்குள்ளான இரண்டு ஐக்கிய அரபுக் குடியரசு எண்ணெ சுத்திகரிப்புநிலையங்களில் ஒன்றை மீண்டும் நிறுவுவதற்குவேண்டிய அத்தனை தளபாடங்களும், ரஷ்யாவிலிருந்து ஐ. அ. கு. வந்துசேர்ந்துள்ளன.

இரண்டு ரஷ்ய சரக்குக் கப்பல்கள், அத்தளபாடங்களை இறக்கும் வேலையில் இங்குள்ள துறைமுகத்தில் ஈடுபட்டுள்ளன.

## அமெரிக்க ஜனாதிபதிபதவிக்கு குடியரசுக்கட்சி அபேட்சகர்

### ரொக்பெல்லரை விட நிக்ஸனுக்கு அதிக அதரவு

நியுஜெர்ஸி, நவ. 22

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கு அபேட்சகர் தெரிவு செய்யப்படும் வேலைகள் இப்போது துரிதமாக நடைபெற்று வருகின்றன.



குடியரசுக் கட்சியில், முன்னாள் உபஜனாதிபதி திரு. ரிச்சார்ட் நிக்ஸனுக்கு, அவரை எதிர்க்கும் நியுயோர்க் கவர்னர் திரு. நெல்சன் ஏ. ரொக்பெல்லரை விட. 3:1 என்ற வீதம் அதிக ஆதரவு இருப்பதாகக் கணிக்கப்பட்டுள்ளது.

இவ்விரு தலைவர்களுக்குமிடையே, யாருக்குக் குடியரசுவாதிகள் அதிக ஆதரவு அளிக்கிறார்கள் என்பதை அறிய நடத்தப்பட்ட கணக்கெடுப்பொன்றில், திரு. நிக்ஸனுக்கு 45 சத வீதமும், திரு. ரொக்பெல்லருக்கு 15 சத வீதமும் ஆதரவு இருப்பதாக அறியப்பட்டுள்ளது.

## ரஷ்யாவில் 100 பேர்; அமெரிக்காவில் 61 பேர்

### விமான விபத்தில் நேற்று மாண்டனர்

மாஸ்கோ, நவ 22

சோவியத் ரஷ்யாவில் நேற்று ஏற்பட்டவொரு விமானவிபத்தில், 100 பேர் வரை மாண்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

ஆனால் இச்செய்தி இன்னும் உத்தியோக பூர்வமான முறையில் ஊர்சிதம் செய்யப்படவில்லை.

**அமெரிக்காவில்**

நேற்று அமெரிக்காவில் பின்சினாட்டாய் விமான நிலையததில் ஏற்பட்ட ஒரு விமான விபத்தில் 61 பேர் உயிரிழந்தனர்.

## முன்னாள் உணவு மந்திரி கோஷ் புதிய முதல் மந்திரியானார்

கல்கத்தா, நவ. 22

**திரு. அஜொய் முக்கர்ஜியின் தலைமையிலான மேற்கு வங்காள மந்திரிசபை மேற்கு வங்காள கவர்னரால் நேற்றிரவு பதவிநீக்கம்செய்யப்பட்டது.**

திரு. முக்கர்ஜியின் ஐக்கியமுன்னணியின் மந்திரிசபையில் உணவுமந்திரியாகவிருந்து, பின்னர் 17 பேருடன் ராஜினாமாச்செய்த திரு. பி. ஸி. கோஷ், நேற்றிரவு 8-20 மணிக்கு, மேற்கு வங்காளத்தின் புதிய முதல்மந்திரியாகச் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார். திரு. பி. ஸி. கோஷ், முற்போக்கு ஜனநாயக முன்னணித் தலைவராவார்.

திரு. பி. ஸி. கோஷிடம், அவரது மற்ற மந்திரிகளைப் பற்றித் தம்மிடம் தெரிவிக்கும்படி கவர்னர் கேட்டுள்ளார். அத்துடன், சட்டசபையை 29-ந் திகதி கூட்டுவதற்கு கவர்னர் உத்தரவிட்டுள்ளார். அப்போது, புதிய மந்திரிசபை, சபையில் தனது பெரும்பான்மை பலத்தை ஊர்ஜிதம்செய்ய வேண்டியிருக்கும்.

**புதிய அரசின் கடமைகள்**

முதல்மந்திரிப் பதவியேற்றதும், திரு. பி. ஸி. கோஷ் தமது மந்திரிசபையின் முக்கிய கடமைகளை எடுத்துரைத்தார். சட்டத்தின் ஒழுங்கையும் ராஜ்யத்தில் நிலைநாட்டுவதே மந்திரிசபையின் முதற் கடமையாகுமென வலியுறுத்திய திரு. கோஷ், ஊழலை ஒழிப்பதும் பணக்காரருக்கும் ஏழைகளுக்குமிடையேயான பேதத்தை நீக்குவதும், உணவு சப்ளையை உறுதிப்படுத்துவதும் மற்றைய முக்கிய கடமைகளாகுமெனக் கூறினார்.

தமது மந்திரிசபை இக்கடமைகளைச் செவ்வனே நிறைவேற்ற, மக்களின் ஒத்துழைப்பை முதல்மந்திரி நாடினார்.

**கவர்னர் அறிக்கை**

மந்திரிசபையைக் கலைத்தது பற்றிக் கவர்னரின் மாளிகையான ராஜ்பவனத்திலிருந்து வெளியிடப்பட்ட அறிக்கையொன்றில் இம்மாதம் 6-ந் திகதி தொடக்கம் ராஜ்யத்தில் ஏற்பட்ட அரசியல மாற்றங்கள் பற்றியும், அவற்றைத் தொடர்ந்து ஏற்பட்ட ஸ்திரமற்ற நிலையைப் பற்றியும் குறிப்பிடப்பட்டது. இந்த அரசியல் ஸ்திரமற்ற நிலை முக்கியமாக அனுபவம்வாய்ந்த அரசியற் தலைவர்களே, ராஜ்யத்தில் குழப்பத்துக்குத் தூண்டிக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டியது அவசியமாகிவிட்டதால், மந்திரிசபையைக் கலைக்கும் நடவடிக்கையைத் தாம் மேற்கொள்ளவேண்டியிருந்ததாக கவர்னர், அவ்வறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**கண்டனமும் வரவேற்பும்**

ஆனால், முன்னாள் முதல் மந்திரி திரு. அஜொய் முக்கர்ஜி கவர்னரின் நடவடிக்கையை, சட்டவிரோதமானதென்றும் அரசியற் சாஸனத்துக்கு முரண்பட்டதானதென்றும்கண்டித்துள்ளார்.

பழம்பெரும் அரசியற் தலைவரான திரு. ஆச்சார்ய கிருபளானி, பெரும் நம்பிக்கைகளைக் கிளப்பிய ஒரு காங்கிரஸல்லாத அரசாங்

(6ம் பக்கம் பார்க்க)

## குழந்தைகளைக் கொன்ற விவசாயி

சியோல், நவ. 22

தென் கொரிய விவசாயி ஒருவர், கோடரியினால் தாக்கி இரு குழந்தைகளைக் கொலைசெய்ததாகப் பொலிசார் இங்கு அறிவித்தனர்.

தமது வீட்டிலிருந்து கோடரி ஒன்றைச் சுழற்றியபடி வெளியே ஓடிய இந்த விவசாயி, வழியில் குழந்தை ஒன்றைத் தூக்கியபடி வந்த 11 வயதுச் சிறுமியைத் தாக்கினார். சிறுமி கொல்லப்பட்டாள். குழந்தை பலத்த காயங்களுக்குள்ளாகியது.

பிறகு, அருகில் இருந்த வீடொன்றினுள் புகுந்து நான்கு வயது நிரம்பிய சிறுவனை அந்த விவசாயி கொன்றதாகப் பொலிசார் மேலும் தெரிவித்தனர்.

**வியட்னும்**

## எதிர்ப்பு பிரச்சாரத்துக்கு அமெரிக்க வீரர்

### ரஷ்யா பயன்படுத்தியதாக அமெரிக்கா ஆட்சேபம்

வாஷிங்டன், நவ 22

அமெரிக்க கடற்படையில் கடமையாற்றிப் பின் சோவியத் ரஷ்யாவுக்குப் புகலிடம் தேடிச் சென்ற ஒரு அமெரிக்ககடற்படை வீரரை வியட்னும் போர் எதிர்ப்பு பிரசாரத்துக்கு ரஷ்யா பயன் படுத்தியுள்ளதையிட்டு அமெரிக்கா ரஷ்யாவிடம் ஆட்சேபித்துள்ளது.

இக்கடற்படை வீரரின் பெயர் ஜோன் சிமித்தாகும் அவர் ரஷ்ய டெலிவிஷனில் தோன்றிவியட்னும் போரை அமெரிக்க மக்கள் எதிர்ப்பதாகக் கூறினார்.

**இந்தியச்சம்பவம்**

அத்துடன் சென்ற வருடம் கஸ்பியன் கடலில் விழுந்து நொறுங்கிய இந்திய விமானமான 'காஷ்மீர் இளவரசி' யின் விபத்து அமெரிக்க உளவு ஏஜென்ஸியான சி. ஐ. ஏ, யின் சதியே எனவும் ஜோன் சிமித் குற்றஞ்சாட்டினார்.

## 'ஜெர்மன் மக்கள் இதயங்களின் அருகில் வந்துவிட்டது இந்தியா'

### இந்திராவுக்கு அளித்த வரவேற்பில் டாக்டர் கேற் கெயிஸிங்கர்

புதுடில்லி, நவ. 22

இந்தியாவில் தற்போது விஜயம் செய்யும் மேற்கு ஜெர்மனித் தலைவர் டாக்டர்கெயிஸிங்கர் நேற்றிரவு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கு ஒரு விருந்துபசாரம் அளித்தார்.

அதில் அவர் பேசுகையில், வெகுவிரைவில், தமது குறுகிய விஜயம் நல்ல பலன்களை அளித்துள்ளதாகக் கூறினார். இந்தியா, ஜெர்மன் மக்களின் இதயங்களுக்கு இன்னும் நெருக்கமாகவந்துவிட்டதாக அவர் குறிப்பிட்டார்.

மேற்கு ஜெர்மனி, இந்திய அரசாங்கங்கள் இரண்டுக்குமிடையேயுள்ள நெருங்கிய உறவு பற்றி தமது பதிலில் குறிப்பிட்ட இந்தியப்பிரதமர்திருமதி இந்திரா காந்தி, இந்த உறவு அரசாங்கங்களுக்கிடையே மட்டுமன்றி இருநாட்டு மக்களிடையேயும் நிலவி வருவதாகக் கூறினார். மக்களிடையே ஏற்படும் உறவுதான் முக்கியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.——

## அதென்ஸில் சதி விசாரணை

### இருவருக்கு ஆயுட் தண்டனை

அதென்ஸ், நவ. 22

அதென்ஸில், தற்போது கிரீசில் [illegible] இராணுவ ஆட்சியாளரை வீழ்த்தச் சதி புரிந்ததென்ற குற்றச்சாட்டில், உயர்நீதி மன்றமொன்று 21 பேரை விசாரணை செய்துள்ளது.

இவர்கள் அனைவரும் சிறைத் [illegible] இவர்களில் இருவருக்கு ஆயுட்காலச்சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

## சீக்கியதலைவர் மாஸ்டர் தாராசிங் நேற்று காலை காலமானார்

### பஞ்சாப் சுதந்திரத்துக்கு போராடிய வீரர்

சண்டிகார், நவ. 22

அகாலித் தலைவர் மாஸ்டர் தாரா சிங், இன்று காலை சண்டிகாரில் காலமானார்.

எண்பத்திரண்டு வயதான இவர், நான்கு நாட்களுக்கு முன்னர். சத்திர சிகிச்சை செய்யப்பட்டிருந்தார். நேற்று மாலை. அவரது உடல் நிலை சற்றுத்தேறியிருந்தது ஆனால், இன்று காலை சடுதியாகத் தோன்றிய இருதய அமுக்கத்துக்கு அவர் பலியானார்.

அவர் இறக்குந்தறுவாயில் அவரது குடும்பத்தினர், மரணப்படுக்கைக்கு அருகே இருந்தனர் அவரது சடலம் ஈமக்கிரியைகளுக்காக நாளை அமிர்தசரஸுக்குக்கொண்டு செல்லப்படும்.

மாஸ்டர் தாராசிங், 1885-ம் ஆண்டு, ஜூன் மாதம் 24-ந் திகதி பிறந்தார். அவர் தமது 17-வது வயதிலேயே சீக்கியத்தைத் தழுவிக்கொண்டார். ஆரம்பத்தில்ஆசிரியராகக்கடமையாற்றிய அவர், பின்னர் மதச்சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டார்.

பின்னர், இந்தியாவின் சுதந்திரப் போராட்டம் நடைபெற்ற போது, மாஸ்டர் தாராசிங், போராட்ட இயக்கத்தில் தீவிர பங்கெடுத்துக் கொண்டார். அதன் விளைவாகப் பல தடவை அவர் சிறைக்குச்சென்றார்.

சுதந்திரத்துக்குப் பின், பஞ்சாப் சுதந்திர இயக்கமான பஞ்சாப் சபாவில் பங்கு பற்றிச் சிறைவைக்கப்பட்டார்.

சீக்கியரிடையே மாஸ்டர் தாராசிங்குக்கு ஒரு தனி மதிப்பு இருந்தது அவர்களின் ஏகோபித்த தலைவராக அவர் விளங்கினார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

சத்திய சொரூபமாய் இருக்கிற ஆண்டவனைத் தவிர வேறென்றும் நிச்சயமில்லாத இவ்வுலகில் நிச்சயமான வாழ்வை எதிர்பார்ப்பது தவறாகும்.

—காந்தி மகான்.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கவருஷம் கார்த்திகைமீ 7உ (23-11-67)

## தோட்டப் பாடசாலை

தோட்டப் பிள்ளைகளின் கல்வி பற்றியும் தோட்டப் பாடசாலைகளின் நிலைபற்றியும் இதுவரை எந்த அரசாங்கமும் கவலைப்படவில்லை. கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை தமது புதிய கல்வி மசோதாவில் தோட்டப் பிள்ளைகளின் கல்விபற்றியும் கவனம் செலுத்தியிருப்பது பாராட்டுக்குரியது.

கட்டாயக் கல்விக்கு வகைசெய்யும் புதியகல்வி மசோதா, கல்வி பெறும் வயதை அடைந்த இருபத்தைந்து பிள்ளைகளுக்கு மேற்பட்டவர்கள் உள்ள தோட்டங்களில், தோட்ட நிர்வாகம் பாடசாலை அமைத்துக்கொடுக்கவேண்டும் என்று மசோதா கூறுகிறது.

தோட்டங்கள் பலவற்றில் இப்போதும் பாடசாலைகள் இருக்கின்றன. ஆனால் அவைகளைப் பாடசாலைகள் என்று சொல்வதற்குப் பதில் சில பிள்ளைகளைச் சில மணிநேரம் வைத்துச் சமாளிக்கும் ஒரு 'கொட்டில்' என்று கூறுவதே பொருத்தம். தோட்டங்களிலுள்ள பாடசாலைகள் சரியான கல்வி நிலையங்களாக இல்லாத காரணத்தாலும், கட்டாயமாகப் பிள்ளைகளுக்கு கல்வி அளிக்கப்படவேண்டுமென்ற சட்டம் இல்லாததாலும், தோட்டத் தொழிலாளரான பெற்றோரின் வாழ்க்கை வசதியற்றதாக இருப்பதாலும் தோட்டப்பிள்ளைகள் கல்வி அறிவு பெறுவதற்கு வாய்ப்பில்லை. 'கூலியின் மகன் கூலி'யாகவே வாழவேண்டுமென்ற நிர்ப்பந்தமே இருந்து வருகிறது. இந்நிலை மாறவேண்டுமென அரசியல் வாதிகளும் தொழிற்சங்க வாதிகளும் மேடைகளில் பேசிவந்துள்ளபோதிலும் இதுவரை இதற்கான முயற்சிகள் எடுக்கப்படவில்லை.

புதிய கல்வி மசோதாவில் தோட்டப்பாடசாலைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளதே சற்று ஆறுதலளிப்பதாகும்.

ஆனால் தோட்டப் பகுதிப் பிள்ளைகளின் கல்விப் பொறுப்பையும் அதற்கான வசதிகளைச்செய்யும் பொறுப்பையும் தோட்ட நிர்வாகத்திடமே விடுவதனால் பெரிய பயன் ஏற்படுமா என்பது சந்தேகமே. தோட்ட நிர்வாகம் தோட்டத்தின் நலனில் தான் அக்கறை கொள்ளுமேயொழிய தோட்டப் பிள்ளைகளின அறிவுவிருத்தியிலும் கல்வி வளர்ச்சியிலும் அக்கறை கொள்ளுமென எதிர்பார்க்க முடியுமா?

தோட்டப் பாடசாலைகளில் இதுவரை சிறந்த தராதரமுடைய ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. ஒரு சில பாடசாலைகளில் ஆசிரிய தராதரப்பத்திரமுடைய ஆசிரியர்கள் சிலர் கடமையாற்றுகின்றனர். அவர்களிலும் சுமார் 300 பேர் அடுத்த வருடத்திலிருந்து அரசினர் பாடசாலைகளில்நியமனம்பெறவிருக்கிறார்களாம். இந்த நியமனமும் கிடைத்தால் தோட்டப் பாடசாலைகளின் தரம் மிக மோசமாகிவிடும். தோட்டப் பாடசாலைகளையும் அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும். இல்லையேல் அதன் ஆசிரியர்கள் நியமனம், கல்விப்போதனை முறை ஆகியவைபற்றி இலாகா திடீர் பரிசோதனை நடத்தி அவற்றின் நலனில் கண்ணும் கருத்துமாக இருக்க ஒழுங்கு செய்யவேண்டும். இல்லையேல் கல்வி மசோதாவில் இடம்பெற்றுள்ள கட்டாயக் கல்வியும் தோட்டக் கல்வியோசனையும் அர்த்தமற்றதாகிவிடும்.

### இன்றைய பலன்

23-11-67
வியாழக்கிழமை
கார்த்திகை மாதம்
7-ந் திகதி
நட்சத்திரம்-பூசம்பகல் 11-28 மேல் ஆயிலியம்
திதி-சஷ்டி பி. ப 3-14 மேல் ஸப்தமி
சுபநேரம்- 7-40—9-10
ராகுகாலம்-1-40 -3-10

மேஷம்- சந்தான சந்திப்பு முத்தான நிகழ்ச்சி
ரிஷபம்- வீறு நடைபோடு வெற்றியுனக்கே
மிதுனம்- பிரிவின் தாக்குதல் பின்தங்க நேரிடும்
கடகம்- மக்கள் கவலை மதியும் தடுமாறும்
சிங்கம்- சொற் சிறப்பு சோர்வு பறக்கும்
கன்னி- இளைய சகோதரச் சுகக்குறைவு, துயர்
துலாம்- உருவத்தால் இருவர் உள்ளத்தால் ஒருவர்.
விருச்சிகம்- கன்னல் மொழி களர்ச்சியுமுண்டு
தனுசு- ஆயுத பயம், அவதானம் வேண்டும்
மகரம்- அழகின் சிரிப்பு அன்பின் அழைப்பு
கும்பம்- நம்பிக்கை மோசடி நன்றுகச்சிந்தி
மீனம்- புதுமை நினைவு புகழுடன் பொருள்

—சோதிடக் கலாநிதி—
திருமலை வேலுப்பிள்ளை

## விவசாயத்தில் மாணவர்

கோண்டாவில், புதன்

கோண்டாவில் சைவத் தமிழ்கலவன் சாதனு பாடசாலை உயர்வ குப்புமாணவர்கள் தலைமை ஆசிரியர் திரு. இ. பொ. குமாரசாமி, மற்றும் ஆசிரியர்களின் தலைமையில் உருத்திரபுரம் சென்று அங்குள்ள வயலில் களை பிடுங்கினர்.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணம், புதன்

மாணவர் களைபிடுங்கும் இயக்கத்தில் வண்ணை நாவலர் பாடசாலை, கொக்குவில் இராமகிருஷ்ணமிஷன் பாடசாலை, கோண்டாவில் இராமகிருஷ்ணமிஷன் பாடசாலையைச்சேரந்த 100மாணவர் பரந்தன் 3-ம் வாய்க்கால் பிலிப்ஸ் என்பவருடைய வயலில் களை பிடுங்கினர்.

# கல்விமான்களும் அரசியல்வாதிகளு

இம்மாதம் 20-ம் திகதி கில்னர் கல்லூரியில் கல்விமான்களும் சில யாழ்ப்பாணத் தலைவர்களும் நடத்திய மகாநாட்டில் சில ருசியான விஷயங்கள் வெளிவந்தன. மகாநாட்டுக்கு அழைப்பு கொடுக்கப்பட்டிருந்தும் அரசியல் தலைவர்கள் அங்கே சமுகம் கொடுக்கவில்லை. ஆனால் அவர்களுக்குப் பதிலாக அவர்களுடைய இரண்டாம் வரிசை கையாட்கள் வந்திருந்தனர். மகாநாட்டில் நடந்த பேச்சுவார்த்தைகளின்போது அரசியல்வாதிகளுக்கும் கல்விமான்களுக்குமிடையில் பல விஷயங்களில் ஒற்றுமை இல்லை என்பது தெளிவாகியது. பெருந்தொகையான விஞ்ஞான ஆசிரியர்களும், கணக்கியல் ஆசிரியர்களும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியூர்களுக்கு மாற்றம் செய்யப்பட்டதில் அரசியல் வாதிகளும் சம்பந்தப்பட்டிருந்தார்கள் என்பது நன்கு புலனாகியது. வெளியூர்களிலுள்ள தமிழ் ஆசிரியர்களுக்கு தங்கள் சொந்த இடங்களில் வேலைபார்க்கும் சந்தர்ப்பமும் அளிக்கப்படவேண்டும் என்று அவர்கள் வாதாடினார்கள். எவருக்கும் தீமை இல்லாமல் மாறுதல் செய்யக்கூடிய குமாஸ்தாக்கள் போன்ற அரசாங்க ஊழியர்களுடன் ஆசிரியர்களை, அதுவும் விசேஷ பயிற்சிபெற்ற ஆசிரியர்களை ஒப்பிடலாகாதென்பதை அவர்கள் துப்புரவாக மறந்துவிட்டார்கள்.

பட்டதாரிகள் பட்டதாரிகளே என்று கல்வி மந்திரி கூறியதாகத் தெரியவந்தது அதாவது ஒரு பட்டதாரிக்குப் பதிலாக இன்னொரு பட்டதாரியை அமர்த்தலாம் என்பது அர்த்தம். வேறு அரசியல்வாதிகளும் இதே கருத்துள்ளவர்கள் என்பது வெளிப்படை. எல்லாப்பட்டதாரிகளும் விஞ்ஞான பாடங்களையோ கணக்கியலையோ மேல்வகுப்புக்களில் கற்பிக்கமுடியாதென்ற அடிப்படை உண்மையை அவர்கள் மறந்துவிட்டார்கள். விஞ்ஞானம் கணக்கியல் ஆகிய பாடங்களில் பட்டம் பெற்றவர்கள்கூட மேல்வகுப்பு மாணவர்களுக்கு வெற்றிகரமாக கல்விபுகட்டுவார்களோ என்பது சந்தேகத்துக்கிடமானது.

யாழ்ப்பாணத்திலுள்ள சில முக்கியமான கல்லூரிகளின்மதிப்பு தராதரமும் அவற்றில் ஆசிரியர்களாயிருந்த ஒரு சில விசேஷ பயிற்சிபெற்றவர்களாலேயே ஏற்பட்டன. இவர்கள் பரந்த அனுபவமும், ஆழ்ந்த பொறுப்புணர்ச்சியும் கடமையும் கொண்டு, தங்கள் கல்லூரிகளுக்காக உடல் பொருள் ஆவி அத்தனையையும் அர்ப்பணித்து, ஆசிரியத்தொழிலில் தத்தம் திறமையை நிரூபித்தவர்கள்.

இப்பேர்ப்பட்டவர்களுக்கு பதிலாக வேறு பட்டதாரிகளை நியமிக்கலாம் என்று கூறுகிறவர்கள், ஆசிரியரின் கடமையைப்பற்றி ஒன்றும் தெரியாத பரிபூரண அறிவிலிகள் என்றே கூறவேண்டும்.

எமது அரசியல்வாதிகளுக்கு [சிலருக்காவது] கல்வி நிலையங்களின் நன்மையைப் பற்றியோ, பொதுவாகக் கல்வியைப்பற்றியோ கவலை கிடையாது. தங்கள் ஆதரவாளர்களுக்கும்செல்வாக்கு வாய்ந்த வாக்காளர்களுக்கும் மட்டும் உதவி செய்ய வேண்டுமென்பதே அவர்களது ஒரே அவா. ஆசிரியர்களையும் குமாஸ்தாக்கள் என நினைத்து அவர்களைக் கண்டபடி இடத்துக்கிடம் மாற்றுவதால்எங்கள் கல்வி நிலையங்களைப் பாழாக்கி, ஏற்கனவே பல காரணங்களால் குறைந்துபோயுள்ள எமது கல்லூரிகளின் தரத்தை மேலும் குறைப்பதாக முடியும்.

இந்த மாற்றங்கள் வேண்டுமென்றே யாழ்ப்பாணக் கல்லூரிகளின் தரத்தை மட்டமாக்கி அவற்றை தென்னிலங்கைக் கல்லூரிகளின் நிலைக்குக் கொண்டு வருவதற்காக திட்டமிட்டு செய்யப்படுபவை என்று மகாநாட்டில் பலர் அச்சம் தெரிவித்தார்கள். தெற்கிலுள்ள கல்லூரிகள் பலகாலமாகக் கவனிப்பாரற்று இருந்தன என்பதில் சந்தேகத்துக்கிடமில்லை. வடக்கிலுள்ள கல்லூரிகள் கடந்த பல

'அவதானி'

ஆண்டுகளாகக் காட்டிவந்த முன்னேற்றத்தையிட்டு சிங்கள அரசியல் வாதிகள் பொறாமைப்படுவதும் உண்மையே. தெற்கிலுள்ள கலாசாலைகளின் தரத்தை உயர்த்துவதற்கு தாராளமாக தக்க முயற்சிகள் எடுக்கப்படட்டும். ஆனால் அதற்காக வடக்கிலுள்ள பாடசாலைகளைத் தியாகம் செய்வது அநியாயம் என்று கூறினாலும் மிகையாகாது. தங்கள் குழந்தைகளுக்கு நிறைவான கல்வி புகட்டவேண்டுமென்ற பேரவாவினால் யாழ்ப்பாணத்து ஏழை மக்கள் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக பள்ளிக்கூடங்களுக்கும் கல்விதளபாடங்களுக்கும் கோடிக்கணக்கான ரூபாய்களை செலவு செய்து வந்திருக்கிறார்கள். கல்வி ஒன்றைக்கொண்டே அவர்கள் ஜீவனம் நடத்தினார்கள். ஆகையால் அவர்களுடைய பள்ளிக்கூடங்களில் கைவைப்பது அவர்களுக்குப் பிடிக்காது. எமது பள்ளிக்கூடங்களை அரசாங்கத்திடம் ஒப்படைக்கலாகாதென்று பல அறிவாளிகள் எச்சரிக்கை செய்திருந்தனர். இதனால் எழும் தீமைகள் இப்பொழுதுதான் தலைகாட்ட ஆரம்பிக்கின்றன.

எமது கல்வி பிரச்னைகளை காலத்துக்குக்காலம் ஆராய்ந்து எங்கள நலன்களைப்பாதுகாப்பதற்கும் கல்வி அதிகாரிகளுக்கு தக்க புத்திமதிகளை கூறுவதற்கும் ஒரு கல்வி ஆலோசனைச் சபையை அமைக்கவேண்டும் என்ற நோக்கம் அருமையானதே. ஆனால் சுயநலம் கருதும்அரசியல்வாதிகள் இதில் தலைபோடாதவண்ணம் இச் சபையை ஸ்தாபிப்பவர்கள் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். மேற்கூறிய மகாநாட்டில் அரசியல் கட்சிகளிடையே வேற்றுமை இருப்பதற்கான அறிகுறிகள் ஏற்கெனவே தென்பட்டன.

இம்மகாநாட்டை கூட்டிய
வர்களுக்கு அரசியல் அக்
கறை இல்லையென்பது
தெளிவு. அவர்களுடைய
ஒரே ஒரு நோக்கம் தக்க
மனிதரைக்கொண்டு விரு
விருப்புடன் வேலையாற்றக்
கூடிய ஒரு ஸ்தாபனத்தை
விரிவான அடிப்படையில்
நிறுவி, அதன் அபிப்பிராயங்
களையும் ஆலோசனைகளையும்
சம்பந்தப்பட்ட அதிகாரி
கள் மரியாதையுடன் ஏற்
றுக்கொள்ளும்படிசெய்வதே
யாகும். சகல விஷயங்களி
லும் தாங்களே தனிநாயகங்
கள் என்று கருதிக்கொள்
ளும் அரசியல்வாதிகள் இத்
தகையதோர் சுதந்திரமான

### ஆசிரியருக்கு கடிதங்கள்

## தமிழ்மொழிபட்டதாரிகள் நிலை உயரவில்லை

இலங்கைக் கல்லூரிகளில் 1968 ஜனவரி முதல் எட்டாம் வகுப்புத் தொடக்கம் பன்னிரண்டாம் வகுப்புவரை உள்ள உயர்தர வகுப்புகள் தனிப்பிரிவாக இயங்க இருப்பது யாவரும் அறிந்ததே. இப் பிரிவுகளில் கலலூரித் தலைவரின் தலைமையின் கீழ் விஞ்ஞானம், மொழி, சமயம், சமூகம் போன்ற பலவேறு துறைகளிலும் அவ்வத் துறைகளில் தேர்ச்சியும் அநுபவமும்வாய்ந்த ஆசிரியர் ஒருவரை மேற்பார்வையாளராக நியமித்தல்வேண்டுமென்ற ஒழுங்குமுறை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

தமிழ், சமயம் என்னும் இரு துறைகளையும் பொறுத்தவரை நிரம்பிய அறிவும் ஆற்றலும்வாய்ந்த புலவர் பண்டிதர், வித்வான், தமிழ் மொழிப் பட்டதாரிகள் கல்லூரிகளில் கடமையாற்றிவருகிறார்கள். தாய்மொழியே கல்வி மொழியாய் தலைமைபெற்று விளங்கும் இந்நாளில் மேற்பார்வையாளர் பதவிக்கு இவர்களை விடுத்து ஆங்கில மொழிப் பட்டதாரிகளை மட்டும் தெரிவுசெய்வது தமிழ்மொழியையும் தமிழ்
அ[illegible]ஞர்களை[illegible]ம் புறக்
க[illegible]ப்பதாக [illegible]இருக்கும்.
எனவே வடக்குக் கிழக்கு
மாகாணங்களைச் சேர்ந்த
தமிழ் எம்.பிக்கள் கல்வி
அமைச்சருடனும் கல்வி
அதிகாரிகளுடனும் தொட
ர்புகொண்டு மொழி சமயம்
என்பனவற்றிற்கு மேற்
பார்வையாளராகப் பண்
டிதர், வித்வான், புலவர்
களை நியமித்துத் தமிழ்
மொழியின் தனித் தன்
மையை காப்பாற்றவேண்டு
மெனக் கேட்டுக்கொள்
கின்றேன். சிங்களமொழி
பண்டிதர்கள் ஆங்கில
பட்டதாரிகள்நிலைக்கு உய
த்தப்பட்டு அதன் சம்ப
மும் பெற்று மொழிசமய
என்பவைகளுக்குப் பொறு
பாக நியமிக்கப்பட்டிரு
கும்போது தமிழ்ப் பண்
டி[illegible]களுக்கு [illegible]வ்வித அ
தஸ்து வழங்கப்படாதிரு
பது வருந்தத்தக்கதே.

தமிழ்ப் பண்டிதன்
சுழிபுரம்.

ஃ ஃ ஃ

## புங்குடுதீவு வல்லன் வீதி

20-11-67 ஈழநாடு பதி
பில் ''அமைச்சர் விஜய
பலனளித்து'' என்ற தலை
பில் வெளிவந்தசெய்தி
யல்ல.

புங்குடுதீவு கிராமச
இருந்த மேற்படி வீ
பகிரங்க வேலைப்பகுதியி
ரால் பாரமெடுக்கப்பட்
பின் இந்த வீதியை வி
வில் அமைத்து ப
சேவையை நடாத்தவேண்
மென்று மேற்படி வட்ட
இளைஞர்களின் கோரிக்
நியாயமென உணர்
தீவுப்பகுதி பாராளுமன
உறுப்பினர் திரு. வ.
ரத்தினம் இதில் தீவிர
வடுக்கை எடுத்ததின்பே
மேற்படி வீதிவேலை
றரை மைல்வரை முடிந்
ளது. மேற்படி 1 1/2 மை
வீதி திறக்கப்பட்டபோ
பா. உறுப்பினரும் இவ்வ
டார இளைஞர்களும்
நின்று எல்லைவைத்து தி
தனர். இச்சம்பவத்தில்
எந்தக் கிராமச்சபை உ
பினரும் கலந்
கொள்ளவில்லை. இ
வீதியின் மிகுதி வேலை
ஆரம்பிப்பதற்கு காணி
விடுவிக்க அப்பகுதி இளை
களும் பாராளுமன்ற உ
பினரும் கடந்த 13-ம் தி
பகிரங்கவேலைப்பகுதி எ
னியருடன் சென்று கா
களை அளந்து வீதி திற

### சுன்னாகம் பட்டினசபை

## ஏழைமாணவர் கல்விக்கு ரூ, 2,500 செலவிடும்

சுன்னாகம், புதன்

அடுத்தவருட வரவு-செலவுத்திட்டத்தில் பாடப் புத்தகங்கள் வாங்க முடியாத நிலையிலுள்ள ஏழை மாணவர்களுக்குப்பாடப் புத்தகங்கள் வழங்குவதற்கென சுன்னாகம் பட்டின சபை 2,500 ரூபா ஒதுக்கியுள்ளது.

பட்டின சபைத் தலைவர் திரு.பி. நாகலிங்கம்தலைமையில் நடைபெற்றசபையின் மாதாந்தக் கூட்டத்தில் 1968-ம் வருடத்திற்கான வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இந்த வரவு செலவுத் திட்டத்தில் பால் உணவுத் தேவைக்கென ரூபாவும்2,500 அனாதைகளின் சவ அடக்கங்களுக்கும் இது சம்பந்தப்பட்ட செலவுகளுக்கென ரூ.1,000மும் ஒதுக்கப்பட்டது.

அடுத்த வருடத்திற்கான வரவு செலவுத் திட்டத்தில் பின்வரும் விஷயங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை விபரம் வருமாறு: சபைக்காரியாலயம் கட்டுவதற்கான நிலம் வாங்கி புதிய கட்டடம் கட்டுவதற்கு ரூ.30,000, பட்டின சபை எல்லைக்குள் இருக்கும் பகுதியைச் சுத்தம் செய்வதற்கு ட்ருக்டர் ஒன்று வாங்குவதற்கு ரூ 15,000 நவீன வசதிகளுடன் மீன் சந்தை கட்டுவதற்குரூ.20,000 14 வீதிகளுக்கு மின்சார விநியோகம் விஸ்தரிப்பதற்கு ஒருலட்சத்து 4 ஆயிரம் ரூபா.

அடுத்த வருடத்தில் மொத்த வருமானம் ரூ.54,36,266 எனவும் ரூ.4,54,919 செலவிடுவதுதெனவும் வரவு செலவுத்திட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...நும் ...திகளும்

...ம்மகாநாட்டை கூட்டிய
...ர்களுக்கு அரசியல் அக்
...றை இல்லையென்பது
...தெளிவு. அவர்களுடைய
...ரே ஒரு நோக்கம் தக்க
...னிதரைக்கொண்டு விறு
...றுப்புடன் வேலையாற்றக்
...டிய ஒரு ஸ்தாபனத்தை
...ரிவான அடிப்படையில்
...றுவி, அதன் அபிப்பிராயங்
...ளையும் ஆலோசனைகளையும்
...ம்பந்தப்பட்ட அதிகாரி
...ள் மரியாதையுடன் ஏற்
...க்கொள்ளும்படிசெய்வதே
...ாகும். சகல விஷயங்களி
...ம் தாங்களே தனிநாயகங்
...ள் என்று கருதிக்கொள்
...ம் அரசியல்வாதிகள் இத்
...கையதோர் சுதந்திரமான

ஸ்தாபனம் ஏற்படுவதை தடுப்பதற்கு பகீரதப் பிரயத்தனம் செய்வார்கள். அதற்கும் மீறி அது உருவானால் எப்படியாவது அதற்குள் நுழைந்து தங்கள் கபட நாடகங்களுக்கு அதை ஒரு கருவியாக்கிக் கொள்ள எத்தனிப்பார்கள்.

இவ்வுத்தேச ஸ்தாபனம் கட்சி அரசியலையும் கட்சி அரசியல்வாதிகளையும் அறவே புறக்கணித்துவிட்டு எமது சமுதாயத்தின் நன்மையையும் எமது முன்னேற்றத்திற்கு அத்தியாவசியமான கல்வியின் நன்மையையும் உண்மையாக விரும்பும் மக்களின் உற்சாகமான ஆதரவைப்பெறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. பெரும்பாலான நன்மக்கள் வீண் தொந்தரவுகளுக்கு அஞ்சி பொதுவிவகாரங்களில் அதிகம் ஈடுபடுவதில்லை. ஆனால் இன்றுயாழ்ப்பாணத்தில் அரசியல்வாதிகளே சகலவிதமான பொது நடவடிக்கைகளிலும் ஆதிக்கம் செலுத்துகிறார்கள். இதன்விளைவாக சமுதாயம் அல்லோல கல்லோலப்பட்டு வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் பின்னடைந்து கொண்டேபோகிறது.

ஆகையால், எமது பிற்கால நலனையும் முன்னேற்றத்தையும் விரும்பும்தேசப் பற்றுள்ளமக்கள் இனிமேலாவது மறைவில் இருக்காமல் தைரியமாக முன்வந்து இவ்விதமான இயக்கங்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிக்க வேண்டும்.

## ...ட்டதாரிகள் ...ரவில்லை

...ஞர்களையும் புறக்
...ப்பதாக இருக்கும்.
...னவே வடக்குக் கிழக்கு
...ாகாணங்களைச் சேர்ந்த
...மிழ் எம்.பிக்கள் கல்வி
...மைச்சருடனும் கல்வி
...திகாரிகளுடனும் தொட
...புகொண்டு மொழிசமயம்
...ன்பனவற்றிற்கு மேற்
...ார்வையாளராகப் பண்
...தர், வித்வான், புலவர்
...ளை நியமித்துத் தமிழ்
...மாழியின் தனித் தன்
...மையை காப்பாற்றவேண்டு
...மனக் கேட்டுக்கொள்
...ன்றேன். சிங்களமொழிப்
...ண்டிதர்கள் ஆங்கிலப்
...ட்டதாரிகள்நிலைக்கு உயர்
...தப்பட்டு அதன் சம்பள
...ம் பெற்று மொழிசமயம்
...ன்பவைகளுக்குப் பொறுப்
...ாக நியமிக்கப்பட்டிருக்
...ம்போது தமிழ்ப் பண்
...களுக்கு ...வ்வித அந்
...ஸ்து வழங்கப்படாதிருப்
...து வருந்தத்தக்கதே.

'தமிழ்ப் பண்டிதன்'

...ழிபுரம்.

ஃ ஃ ஃ

## புங்குடுதீவு வல்லன் வீதி

20-11-67 ஈழநாடு பதிப்
...ில் "அமைச்சர் விஜயம்
...லனளித்து" என்ற தலைப்
...ில் வெளிவந்தசெய்தி சரி
...ல்ல.

புங்குடுதீவு கிராமசபை
...இருந்த மேற்படி வீதி
...கிரங்க வேலைப்பகுதியின
...ால் பாரமெடுக்கப்பட்ட
...ின் இந்த வீதியை விரை
...ில் அமைத்து பஸ்
...ேசவையை நடாத்தவேண்டு
...மென்று மேற்படி வட்டார
...ளைஞர்களின் கோரிக்கை
...ியாயமென உணர்ந்த
...ீவுப்பகுதி பாராளுமன்ற
...உறுப்பினர் திரு. வ. நவ
...த்தினம் இதில் தீவிர நட
...வடிக்கை எடுத்ததின்பேரில்
...மேற்படி வீதிவேலை ஒவ்
...றரை மைல்வரை முடிந்துள்
...ளது. மேற்படி 1 1/2 மைல்
...வீதி திறக்கப்பட்டபோது
...பா. உறுப்பினரும் இவ்வட்
...ார இளைஞர்களும் முன்
...ின்று எல்லைவைத்து திறந்
...தனர். இச்சம்பவத்தில்கூட
...ந்தக் கிராமச்சபை உறுப்
...ினரும் கலந்து
...கொள்ளவில்லை. இந்த
...வீதியின் மிகுதி வேலைகள்
...ஆரம்பிப்பதற்கு காணிகளை
...விடுவிக்க அப்பகுதி இளைஞர்
...களும் பாராளுமன்ற உறுப்
...பினரும் கடந்த 13-ம் திகதி
...பகிரங்கவேலைப்பகுதி என்ஜி
...னியருடன் சென்று காணி
...களை அளந்து வீதி திறந்து

கொடுத்தனர். இதைத் தொடர்ந்து மிகுதிவேலையும் ஆரம்பமாகின்றது. இவ்வேலை முடிந்ததும் மிகவிரைவில் இவ்வீதியால் பஸ் சேவை ஆரம்பிக்கஇருக்கின்றது.

இவ்வீதிக்கென மத்திய அரசாங்கத்திலிருந்து பகிரங்க வேலைப்பகுதிக்கு பணம் ஒதுக்கப்பட்டு மிக விரைவில் வீதியமைக்க ஏற்பாடு செய்து புங்குடுதீவு கிழக்குமக்களுக்குமாபெரும் வசதியை ஏற்படுத்திக் கொடுத்தபெருமை திரு. வ. நவரத்தினத்துக்கே உரியது.

தா. மகேஸ்வரன்,
க. சிவநாமம்.

9-ம்வட்டாரம்,
புங்குடுதீவு.

ஃ ஃ ஃ

## பஸ்சேவை படுமோசம்

யாழ்ப்பாணத்தில் இருந்து ஊர்காவற்றுறைக்குச் செல்லும் 779இலக்க பஸ்சேவை நாளுக்குநாள் சீர்கேடடைந்துவருவதால் இங்கு உள்ள மக்களிடையே அதிருப்தி நிலவுகிறது. வேலணை வங்களாவடியிலிருந்து ஊர்காவற்றுறைக்குச் செல்லும் குறுகிய பஸ்சேவையும் இல்லாததால், ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளிகள் உட்பட மற்றும் பிரயாணிகள் பெரிதும் கஷ்டமுறுவதுடன் தனிப்பட்டவர்களின் வாகனங்களில் அதிக பணம் கொடுத்துச் செல்லவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டுள்ளது. சில சமயங்களில் தனிப்பட்டவர்களின் வாகனங்கள் கிடைக்காதபோது பல மைல் தூரத்தை நடந்தே செல்லவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டுள்ளது. இ. போ. சபையினர்

இதுவிஷயத்தில் கவனம் எடுப்பார்களா?

இ. முத்து

ஊர்காவற்றுறை.

ஃ ஃ ஃ

## சிறுமி மீது பலாத்காரம்
### 6 மாதச் சிறைத் தண்டனை

சாவகச்சேரி, புதன்

பதின்மூன்று வயதுச் சிறுமியைக் கடத்திப் பலாத்காரம் பிரயோகித்த இளைஞருக்கு ஆறு மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

சாவகச்சேரியிலுள்ள கோவில் குடியிருப்பு என்ற இடத்தில் வசிக்கும் வேலன் செல்வராசா அல்லது சின்ன ராசா என அழைக்கப்படும் சுமார் 20 வயது இளைஞர் ரரமையாவின் மகள் சின்னம்மா என்ற 13 வயதுச் சிறுமியை சிறுமியின் பெரிய தாயார் பாதுகாப்பிலிருந்து கடத்திச் சென்று பலாத்காரம் பிரயோகித்ததாகச் சாவகச்சேரிப் பாலிசாரால் குற்றம் சாட்டப்பட்ட இவ்வழக்கு நேற்றுக்காலை சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

இதைத்தொடர்ந்து சிறுமியைக் கடத்திய குற்றத்திற்கு 6 மாத சிறைத் தண்டனையும் சிறுமி மீது பலாத்காரம் பிரயோகித்தமைக்கு ஆறு மாதச் சிறைத்தண்டனையும் விதித்து இரண்டும் ஏககாலத்தில் அனுபவிக்கப்படவேண்டுமெனத் தீர்ப்பளித்தார்.

# கண்டியில் துறைமுகம் இருக்கிறது!

1. கேள்வி: திரு. பூன் வாட் என்பவர் யார்?

பதில்: இலங்கை மந்திரி சபையில் ஓர் அங்கத்தவர்!

2. கேள்வி: திருகோணமலை துறைமுகத்தில் தினமும் 40 கப்பல்கள் நிற்கும். அப்படியானால் கண்டி துறைமுகத்தில் எத்தனை கப்பல்கள்?

பதில்: சுமார் 15 கப்பல்கள்!

3. கேள்வி: முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி கென்னடியை சுட்டுக் கொன்றது யார்?

பதில்: ஜோன்சன்!

4. கேள்வி: சீனாவின் தலைநகரம் எது?

பதில்: நியூயோர்க்!

5. கேள்வி: கோஸிஜின் என்றால் என்ன?

பதில்: அது ஒருவிதமான குடிவகை!

6. கேள்வி: கார்பீல்ட் சோபேர்ஸ் என்பவர் யார்?

பதில்: அவர் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்!

7. கேள்வி: சிறிமாவோ பண்டாரநாயக்கா எந்த நாடாளுமன்றத் தொகுதியின் பிரதிநிதி?

பதில்: டெடிகமம!

சமீபத்தில் நடந்து முடிந்த பொலிஸ் கான்ஸ்டபிள் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்த விண்ணப்பதாரிகள் பொலிஸ் சுப்பிரிண்டடன்ட் திரு. ஆர். சுந்தரலிங்கம் கேட்ட கேள்விகளுக்கு அளித்த விடைகள் தான் மேல் காணப்படுபவை.

விகளையும் கேட்டுப்பார்த்தேன். அவற்றிற்கு ம... டும் சரியான விடைகள் 'ட... டக்கென்று வந்தன' என்று சொன்னார்.

அவை என்ன கேள்விகள் தெரியுமா?

8. எம். ஜி. ஆரை சுட்டது யார்?

பதில்: எம். ஆர். ராதா...

9. கேள்வி: ராதாவின் இலங்கை மனைவியின் பெயர் என்ன?

பதில்: கீதா.

# நாட்டிலும் நகரிலும்

— 'வழிப்போக்கன்' —

இத்தகவலைத் தெரிவித்த, திரு. சுந்தரலிங்கத்திடம் நான் சொன்னேன்: "ஐயா, உங்களுக்கு பொது அறிவு கேள்விகள் கேட்கத் தெரியாது. நீங்கள் கேட்க வேண்டியது என்னவென்றால் ...."

அவர் என்னை உடனே இடைமறித்து, 'ஓம் நீங்கள் சொல்வது எனக்கு விளங்குகிறது. நான் அந்தக் கேள்...

10. கேள்வி: இப்பொழுது வெலிங்டனில் என்ன படம் ஓடுகிறது.

பதில்: முகராசி.

பார்த்தீர்களா, நமது எஸ். எஸ். ஸி., ஜீ. ஸி. ஈ... படித்த மாணவர்களின் பொது அறிவை?

முதல் ஏழு கேள்விகளும் உலகப் பொதுஅறிவும் உள்ளூர் பொதுஅறிவும் சம்பந்தப்பட்டவை. அவற்றிற்குக் கிடைத்தபதில்கள் சுத்தமுட்டாள் தனமானவை.

கடைசி மூன்று கேள்விகளும் சினிமா சம்பந்தமானவை. அவற்றிற்கு அட்சரசுத்தமான பதில்கள் சற்றும் தயக்கமில்லாமல் கிடைத்தன.

இந்த மகா கேவலமான நிலைமைக்கு காரணம் யார்? மாணவர்களா, பெற்றோர்களா, சினிமாவா?

அல்லது ஆசிரியர்களா?

புனிதவதி கொலை வழக்கு

# நீ வந்ததுமல்லாமல் இன்னொருவரையும் கூட்டிவந்தாயா?

## இறந்தவர் இப்படி பேசியதாக இளம்பெண் சாட்சியம்

குரும்பசிட்டி, புதன்

புனிதவதி கொலை வழக்கு மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. ரி. எஸ். நெத்தசிங்கா முன்னிலையில்ஐந்தாவது தடவையாக விசாரணை செய்யப்பட்டபோது இறந்தவரது வீட்டில் வசித்த பற்குணதேவி பெரியதம்பி என்ற இளம்பெண் சாட்சியமளித்தார். இவ்வழக்கில் தொல்புரத்தைச் சேர்ந்த ஏ. கிருஷ்ணபிள்ளை அல்லது மாயவன், பி. சுவாமிநாதன், ரி. திருநாவுக்கரசு, என். தவராசா, ரி. ஜெயச்சந்திரன், ரி. விநாயகம் ஆகியோர் இவ்வருடம் அக்டோபர் 4-ந் திகதி புனிதவதி கைம்பெண் சுப்பிரமணியம் [வயது 45] என்பவரைக் கொலைசெய்ததாக சங்கானைப்பொலிசார் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

பற்குணதேவி தமது சாட்சியத்தில் கூறியதாவது: சம்பவ தினத்தன்று காலையில் மயில்வாகனம் என்பவர் வந்து வீட்டு விறாந்தையிலுள்ள கட்டிலில் அமர்ந்திருந்து, நின்றுகொண்டிருந்த என்னுடன் சுமார் 15 நிமிடங்கள்வரை பேசிக்கொண்டிருந்தார். முதலில் இறந்தவரான புனிதவதி என்னை மயில்வாகனத்துடன் பேசுவதற்கு அனுமதிக்கவில்லை. அவரை நான் அண்ணன் என அழைத்தபின்னர் எனக்கு வேண்டியவர் என நினைத்துப் பேசுவதற்கு அனுமதித்தார். பின்னர் அன்றையதினம் மாலையில் முதல் எதிரியுடன் கூடிக்கொண்டு திரும்பவும் அவர் வீட்டிற்கு வந்தார். முதல் எதிரியை எனக்குமுன்னர் தெரியாது. அவருடன் ஒருபோதும் பேசியதில்லை. மயில்வாகனம் சொல்லித்தான் முதல் எதிரியை நான் அறிந்தேன். அந்நேரம் குசினிப் பக்கத்தில் நின்றவாறு என்னுடன் மயில்வாகனம்பேசிக்கொண்டிருக்கையில் முதல் எதிரி காலஞ்சென்றவருடன்விறாந்தைப்படிக்கண்மையில் பேசிக்கொண்டிருந்தார். பின்னர் முதல் எதிரியிடம் சென்ற மயில்வாகனம் அவரை வீடு திரும்ப அழைத்தார். அவர் வந்தது மட்டுமல்லாது வேறு நபரையும் அழைத்து வந்திருப்பதாக மயில்வாகனத்திடம் இறந்தவர் ஏசினார். இதையடுத்து இருவரும் வீட்டை விட்டுக் கிளம்பினர். பின்னர் முதல் எதிரி மட்டும் உடனடியாக மறுபடியும் வீட்டு வளவிற்குள் வந்து படலையில் வைத்து இறந்தவருடன் பேசிக்கொண்டிருந்தார்.

புனிதவதி இறந்த தினமான அக்டோபர் 4-ந் திகதி ஞாபகமிருக்கிறது அன்று நானும் சிவஞானதிருவும் இரவு 6-30 மணியளவில் சாப்பாட்டை முடித்துக்கொண்ட பின்னர் இறந்தவருக்கு உணவு பரிமாறினோம். சம்பவ நாள் வீட்டுப் படலையை சிவஞானதிரு பூட்டியிருந்தார். சிறிது நேரம் நானும் இறந்தவரும், சிவஞானதிருவும் பேசிக்கொண்டிருந்த பின் நாம் இருவரும் படுக்கைக்குச் சென்றோம். இறந்தவர் விறாந்தையில் கட்டிலில் படுத்தார். அறைக்குள் லாம்பு விளக்கை வைத்துக்கொண்டு கதவிற்கு "தாழ்ப்பாள்" ...டு... நாம் உறங்கி... ...தோ' செம்பு விழுந்த சத்தம் கேட்டு நான் எழுந்து வந்து அறைக்கு வெளியே பார்த்தேன். விழுந்திருந்த செம்பை எடுத்து இறந்தவரிடம் கொடுத்தேன். விறாந்தைப்படியிலிருந்த புனிதவதி எம்மைப் பயப்படாது தூங்கிக்கொள்ளும்படி கூறினார். நாங்கள் நித்திரையிலிருந்தபோது மறுபடியும் சத்தம் கேட்டது. சிவஞானதிரு எனக்கு முன் எழுந்து விறாந்தைக்குச் சென்றார். நான் அவரைப் பின்தொடர்ந்தேன். இறந்தவர் படுத்திருந்த பக்கம் நாம் போனோம். திரு. 'கள்ளன்' எனக் குரலெழுப்பிய வண்ணம் முற்றத்தால் ஓடினார். நானும் அங்கு சென்றபோது குதித்து விழும் சத்தம் கேட்டது. திரும்பி எனக்கு அருகில்வந்த திரு மாயவனைப்போலயாரோஒடுகின்றான், அம்மா எங்கே" எனக்கேட்டார். அறையிலிருந்து விளக்கை நான் எடுத்து வந்து பார்த்தபோது அறை வாசலில் கொலையுண்டவர் படுத்திருப்பதுபோலக் காணப்பட்டார். உற்றுப் பார்க்கையில் இரத்த வெள்ளத்தில் கிடப்பது தெரிந்தது. இறந்தவரின் இரத்தம் காணப்படுவதாக நான் குளறவே திருவும் ஓடிவந்து விட்டார். "அம்மா அம்மா' எனத் திரு அழைத்தார் இருவருமாகப் பின் குளறினோம். நாம் பார்த்த பொழுது இறந்தவர் அசைவு எதுவுமின்றி காணப்பட்டார். கழுத்திலிருந்து இரத்தம் வழிந்தது கூக்குரலிட்ட சத்தத்திற்கு அயலவர் கூடினர். ஸ்தலத்திற்கு வந்த பொலிஸாரிடம் வாக்குமூலம் கொடுத்தேன்.

சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுவதற்காக மேல் விசாரணையை நீதிபதி அடுத்தமாதம் 2-ம் திகதிக்கு ஒத்திவைத்தார். எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு. ஆர் ஜே செல்வரத்தினம் ஆஜரானர். பொலிஸ் தரப்பில் திரு. ரி. தம்பிரத்தினம் வழக்கை நடத்தினர்.

## இடுகாட்டுப் பாதை

14-10-67 'ஈழநாடு' பத்திரிகையில் 'பாதை விஸ்தரிக்க உறுதி' என்ற தலைப்பில் வெளியான செய்தி பற்றி ஒரு விளக்கம்:

ஆனைக்கோட்டை உயரப் புலத்தில் குருகுல கிறிஸ்தவர்கள் மாத்திரம் உபயோகிக்கும் இடுகாட்டுக்குப் பாதை இல்லை. இதை நாம் அரசாங்க அதிபருக்கும், நல்லூர் எம். பி.க்கும், ஆனைக்கோட்டை கிராமசபைத் தலைவருக்கும் முறையிட்டுப் பாதை அமைக்க முயற்சி செய்துகொண்டிருக்கிறோம்.

எம். பேரின்பநாயகம்

...உயரப்புலம்,

ஆனைக்கோட்டை.

## சவுக்கினால் அடித்தார்
### சேலை கிழிந்தது

சாவகச்சேரி, புதன்

இவ்வருடம் மார்ச் 9-ம் திகதி மாலை 5 மணிக்கு சிரமதான வேலையொன்று முடிந்து வீடு சென்றுகொண்டிருந்தேன். அங்கு வந்த எதிரி ஐந்து ஆறு தடவைகள் எனக்கு சவுக்கினால் அடித்தார். இதனால் எனது சேலை கிழிந்துவிட்டது. சேதுலிங்கம் கணபதி என்பவர் வந்து அவரைத் தடுத்துநிறுத்தினர்.

நான் பொலிசில் இது பற்றி முறையிட்டேன்".

சின்னப்பொடியன்பொன்னன் என்பவர் செல்லம்மா என்ற பெண்ணைத் தாக்கிக் காயப்படுத்திய வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்கினராசா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டபோது சாட்சியமளித்த தாக்கப்பட்ட பெண் செல்லம்மா மேற்கண்டவாறு கூறினர்.

விசாரணை முடிவில் எதிரியைக் குற்றவாளியாகக் கண்ட மாஜிஸ்திரேட் தீர்ப்புவழங்குவதை இம்மாதம் 29-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## கூட்டுறவு கருத்தரங்கம்

மானிப்பாய், புதன்

யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுத் துறைமுகச் சேவை சமாசம் இம்மாதம் 25, 26-ம் திகதிகளில் கூட்டுறவு கருத்தரங்கினை யாழ்ப்பாணம் கூட்டுறவுப் பயிற்சிக் கலாசாலையில் நடாத்தவிருக்கின்றது. இக்கருத்தரங்கில் கூட்டுறவு ஆக்க ஆணையாளர் திரு. பி. ஏ. சில்வா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் இடமாற்றத்தில் தமிழரசின் கொள்கை

## எஸ். ஜே. வி. விளக்கம்

யாழ்ப்பாணம், வியா.

''நீண்டகாலம் யாழ்ப்பாணப் பகுதியில் கடமையாற்றிய ஆசிரியர்கள் வெளிமாகாணங்களுக்கு மாறிச் செல்ல. வெளிமாகாணங்களில் நீண்ட காலம் கடமையாற்றியவர்கள் தமது சொந்த இடங்களில் சில காலமாவது கடமையாற்ற வசதி செய்யப்படவேண்டும். இதுவே தமிழரசுக்கட்சியின் கொள்கை'' என்று தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் யாழ்ப்பாணம் தமிழரசுக்கட்சிக் காரியாலயத்தில் அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழ் ஆசிரியர் சங்கத் தூதுகோஷ்டியினருக்கு தெரிவித்தார்.

அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழாசிரியர் சங்கத்தின் சார்பில் சங்கத் தலைவர் திரு. எஸ் சண்முகதாசன், பொதுக்காரியதரிசி திரு. அ. பொன்னம்பலம், திருவாளர்கள் வ. மகாலிங்கம், க. சிவகுருநாதன், வி. நடராசா, எஸ். சிவசிதம்பரம் ஆகியோர் இத்தூதுகோஷ்டியில் அங்கம்வகித்தனர்.

முதலாந்தர, இரண்டாந்தர தலைமையாசிரியர் பதவி வெற்றிடங்கள் சுமார் 300க்கு அதிகமாக இருக்கவும் சுமார் 200 வெற்றிடங்களே 1-1-68ல் நிரப்ப உத்தேசிக்கப்பட்டிருக்கின்றதென்றும் மேலும் சிங்களப் பாடசாலைகளிலுள்ள தமிழ்ப் பிள்ளைகள் பிரிக்கப்பட்டு தமிழ்த் தலைமையாசிரியர்களின் கீழ் இயங்கவேண்டும் என்றும் முழுத் தலைமையாசிரியர் பதவி வெற்றிடங்களும் 1-1-68ல் நிரப்பப்படவேண்டுமென்றும் இப்பேட்டியின்போது வற்புறுத்தப்பட்டது.

வெளிமாகாணங்களில் உள்ள காலியான உதவியாசிரியர் இடங்களெல்லாம் யாழ்ப்பாணப்பகுதி ஆசிரியர்களை மாற்றுவதன் மூலம் நிரப்பப்பட்டால் யாழ்ப்பாணப் பகுதியின் பெருந்தொகையான மாணவ ஆசிரியர்களைத் திரட்டுவதற்கு வசதி ஏற்படும் என்றும் மாணவ ஆசிரியர் முறை சிறந்ததல்லாவிடினும் இப்போதுள்ள நிலவரத்தில் யாழ்ப்பாணத்தில் படித்த வாலிபர்கள் பெருந்தொகையாக வேலைவசதி பெறுவதற்கு இது ஒரு இலகுவானதும், நிச்சயமானதுமான வழியென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது. வெளிமாகாணங்களில் முஸ்லிம் பாடசாலைகளிற் கற்கும் தமிழ் மாணவர்களின் தொகைக்கேற்பத் தமிழ் ஆசிரியர்கள் நியமிக்கப்படவேண்டுமென்பதும் இப் பேட்டியின்போது வற்புறுத்தப்பட்டது.

1-1-67ல் நிகழ இருக்கும் ஆசிரியர் மாற்றத்தில் பெருந்தொகையானோர் பெண்களாகயிருப்பது ஆட்சேபனைக்குரியதல்லவா? என்று ஒருவரால் கேட்கப்பட்டபொழுது வெளிமாகாணங்களில் பல பாடசாலைகளில் பெண்ணாசிரியர்கள் இல்லையென்பதும், வெளிமாகாணங்களில் வசிக்கும் தமிழ்ப் பெண்பிள்ளைகள் தமது கிழிந்த உடைகளைத் தானும் தைக்க அறிவற்றவர்களாக இருக்கிறார்கள் என்பதும் எடுத்துக்காட்டப்பட்டது.

இப்பேட்டியின் போது திரு. எஸ. ஜே. வி. யுடன், டாக்டர் ஈ. எம். வி நாகநாதன், திருவாளர்கள் எஸ். கதிரவேலுப்பிள்ளை, வி. தர்மலிங்கம், செனட்டர் திரு. எஸ். நடராஜா ஆகியோருமிருந்தனர்.

---

## கருத்தரங்கு

சுழிபுரம், புதன்

தொல்புரம், மூளாய் ஐக்கிய நாணய சங்கங்களின் மேற்பார்வைச் சபையினர் நாணய சங்கங்களைத் திறம்பட நடத்துவதற்கு வேண்டிய வழிவகைகளை ஆராய்வதற்கு ஒரு கருத்தரங்கத்தை பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலையில் நடத்தவிருக்கின்றனர்.

அடுத்தமாத நடுப்பகுதியில் நடைபெறும் இக்கருத்தரங்கில் கூட்டுறவுத்துறையில் சிறந்துவிளங்கும் அறிஞர்களும் சிரேஷ்ட கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளரும், கூட்டுறவு உத்தியோகத்தர்களும் கலந்துகொள்ளவிருக்கின்றனர். இளைப்பாறிய கூட்டுறவாளர் ஆர். சி. எஸ். குக்கும் கருத்தரங்கில் கலந்துகொள்ளவிருக்கிறார்.

## வேலணை பெற்றோர் ஆசிரியர் கோரிக்கை

வேலணை, புதன்

வேலணை சரஸ்வதி, அம்பிகை மகளிர்பாடசாலைகள் இரண்டையும் தரம் உயர்த்தக் கோரும் மகஜரை வேலணை பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினர் வடபகுதி வித்தியாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

இப்பாடசாலைகள் இரண்டும் ஊர்காவற்றுறைத் தொகுதியின் மத்தியஸ்தானமான வேலணை வங்காலி-வடியில் அமைந்துள்ளதாலும் இவ்விரு பாடசாலைகளிலும் சுமார் 450 பிள்ளைகளுக்கு மேல் கல்வி பயின்று வருவதால் இப்பாடசாலைகளை தரம் உயர்த்துமாறும் மகஜரில் கோரப்படுட்ள்ளது.

## சிறுவருக்கு வாரியார் சொற்பொழிவு

வெள்ளவத்தை, புதன்

''குழந்தைகள் தெய்வத்துக்குச் சமமானவர்கள். நெஞ்சிலே வஞ்சமற்ற பிஞ்சு உள்ளங்களைக் கொண்ட இக் குழந்தைகள் என்றால் எனக்குக் கொள்ளை ஆசை. இவர்களைக் கல்லூரிகளில் விட்டு நல்ல முறையில் பாடஞ் சொல்லிக் கொடுக்க வேண்டும். அக்காலத்தில் நான் குருகுல முறைப்படி குருவின் கால்களைப் பிடித்துவிட்டும், விறகு சுமந்தும் கஷ்டப்பட்டுப் படித்தேன். ஆனால் இக்காலத்தில் மாணவர்கள் வகுப்பிலே உட்கார்ந்திருக்கிறார்கள். ஆசிரியர் தான் பாவம், நின்றுகொண்டு படிப்பிக்கிறார். காலம் எவ்வளவு தூரம் மாறி விட்டது.? எழுத்தறிவித்தவன் இறைவன். குருவை எக்காலமும் மதிக்கவேண்டும்''

இவ்வாறு திருமுருககிருபானந்த வாரியார் வெள்ளவத்தையில் தாம் நிகழ்த்திய சிறுவர்களுக்கான சொற்பொழிவின்போது குறிப்பிட்டார்.

## வயல்களில் மாணவர்

அச்சுவேலி, புதன்

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை மாணவர்கள் பாடசாலைக்குச் சிறிது தூரத்து வயல்களில் களை பிடுங்கினர். இதில் மேற்படி பாடசாலை ஆசிரியர்களும் கலந்துகொண்டனர்.

---

## 'பழைய பஸ் சேவைதான்'

யாழ்ப்பாணம், வியா.

''இ. போ. ச. வினால் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளதாகக் கூறப்படும் யாழ்ப்பாணம் சேந்தன்குள பஸ் சேவை சுமார் 15 வருடங்களுக்கு முன்னமே முறையாக நடைபெற்று வந்த ஒரு சேவையாகும். சேந்தான்குளம் வரைக்கு சென்று வந்த பஸ் சேவையை பாதியில் நிறுத்தி இது வரைக்கும் பழைய நிலைக்குக் கொண்டு வராத காரணத்தினாலேயே நாம் இ.போ.ச. அதிகாரிகளை அரசாங்கஅதிபர் முன்னிலையில் நிறுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இது ஒரு புதிய பஸ்சேவை என்னும் கருத்துப்பட வெளிவந்த செய்தி தவறானதாகும். இவ்வாறு சேந்தான்குளம் சண்டிலிப்பாய் பஸ் பிரயாணிகள் சங்கக் காரியதரிசி தெரிவிததுள்ளார்.

வெள்ளவத்தையில்

## வீதி விபத்தைத் தடுக்க மேலதிக பொலிஸ்

வெள்ளவத்தை, புதன்

வெள்ளவத்தை, பம்பலப்பிட்டிப் பகுதிகளில் ஒரே வாரத்தில் நடைபெற்ற இரண்டு பயங்கர விபத்துக்களைத் தொடர்ந்து தற்போது இப்பகுதிகளில் பொலிசார் பலத்த கண்காணிப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளானர். ஒவ்வொரு பாதைக் கடவைகளிலும் சப் இன்ஸ்பெக்டருடன் கூடிய நான்கு பொலிசார் சேவைக்கு விடப்பட்டுள்ளனர்.

இந்த மாதம் நாட்டின் பலபாகங்களிலும் அதிகளவு தெருவிபத்துக்கள் ஏற்பட்டு பல உயிர்கள் பலியாகிவிட்டன. என்றும் பொது மக்களும் சாரதிகளும் போக்குவரத்தின் போது கூடிய கவனமெடுக்க வேண்டுமென்றும் வெள்ளவத்தைப் பொலிஸ் அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மதுவெறியில் வாகனங்களை ஓட்டும் சாரதிகளைக் கண்காணித்துப் பிடிப்பதற்கெனப் பொலிசார் இனிமேல் தீவிர முயற்சி எடுப்பார்கள் என்றும் இவர் தெரிவித்தார்.

## கடல் தொழிலாளர் முன்னேறவழி

அளவெட்டி, புதன்

''அறியாமை, அழுக்காறு முதலியவற்றை நீக்கி மக்களின், வருங்கால வாழ்வு சிறப்புற சேமிக்கும் வழிவகைகளை எமது கடல் தொழிலாளர் கடைப் பிடித்தால் அதிவிரைவில் முன்னேற்றம் அடைய ஏதுவாகுமென வடமாகாண கடல் தொழிலாளர் கூட்டுறவு சமாஜத் தலைவர் திரு. ஸ்ரனிஸ்லாஸ் ஊறணிபுனித அந்தோனியார் கூட்டுறவு மீன்பிடிச்சங்கத்தின் விசேஷ பொதுக் கூட்டத்தில் பேசும போது கூறினார்.

மேற்படிசங்கத் தலைவர் திரு. பி. நேசமுத்து தலைமையில் சங்க செயலாளர் திரு. மு. செல்வராசா தமது அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

## பிரயாணிகள் அவதி

சாவகச்சேரி, புதன்

சாவகச்சேரி பஸ் நிலையத்தில் சேறும் தண்ணீருமாக இருப்பதால் பிரயாணிகள் பஸ் ஏறுவதற்கும் இறங்குவதற்கும் கஷ்டமடைகின்றனர். கடந்த பல வருடங்களாக இப் பஸ் நிலையம் திருத்தப்படாதிருப்பதால் பஸ் நிலையம் முழுவதும் கிடங்குகளும் சேறும் தண்ணீருமாக இருக்கிறது.

---

# முறைப்பாட்டுக்கு சென்றவர் அகப்பட்டுக் கொண்டாராம்

சங்கானை, புதன்

பொலிஸாரிடம் முறைப்பாடு கொடுக்கச் சென்ற ஒருவர் தாமே மாட்டிக்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டதாகத் தெரியவருகிறது.

காரைநகர் வலந்தலையைச் சேர்ந்தவராகக் கூறப்படும் இவர் தாம் வரும் வழியில் தம்மை யாரோ மறித்துத் தாக்கியதோடு தம்மிடமிருந்த பணத்தையும் பறித்துச் சென்றுவிட்டதாக சங்கானைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த போது முறைப்பாட்டைப் பதிவுசெய்த பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. சரவணமுத்து மேற்படி முறைப்பாட்டுக்காரரின் பேச்சில் சந்தேகம் கொண்டு இவர் செலுத்தி வந்த வானை சோதனையிட்டபோது பறிக்கப்பட்டதாகக் கூறப்பட்ட ரொக்கப் பணத்தை வானின் சாரதி ஆசனத்துக்குக்கீழ் இருக்கக்கண்டு பிடித்ததாகவும் இவரை மேலும் விசாரணைசெய்தபோது பல் விபரங்கள் வெளிவந்ததாகவும் தெரியவருகிறது.

முறைப்பாடு தெரிவிக்க வந்த இவர் மீது வாறண்ட் பிறப்பிக்கப்பட்டிருந்ததும் விசாரணையின்போது தெரிய வந்ததாம்.

பொலிஸார் இவரைத் தொடர்ந்து விசாரணை செய்துவருகின்றனர்.

---

# வடபகுதியில் நீர் வற்றுது தடுக்க வழி

உடுப்பிட்டி, புதன்

''ஒருநாட்டின் வளத்திற்கு வான் சிறப்பு இன்றியமையாதது. யாழ்ப்பாணப் பகுதித் தரையமைப்பைக் கவனிக்கும்போது மேல்படையில் பல்வேறு வகைப்பட்ட மண்ணைக் காணினும், நிலத்தினுள் சுண்ணாம்பு மக்கி, களி ஆகியன அமைந்திருப்பதை அவதானிக்கமுடிகின்றது. யாழ். குடாவில் உள்ள நிலத்தில் சுண்ணாம்புக் கற்பாறை அமைந்திருத்தலினாலேயே வானம் வற்றினாலும், நீர் வற்றுதிருக்கின்றது. இதற்கு அத்தாட்சியாக வடபகுதியில் அத்துளு, நிலாவரை ஆகிய வற்றாத நீரூற்றுக்கள் சான்றுபகருகின்றன. ஆனால் அண்மையில் இலங்கைக்கு வந்து ஆராய்ச்சிகள் நடாத்திய இஸ்ரேல் நிபுணர் ஏர்னட் என்பவர் இன்னும் 25 வருடங்களில் இலங்கை பாலைவனமாகிவிடும் எனக்கூறிவிட்டுச் சென்றார். அவருடைய முடிவு தவறானது. ஓரிரண்டு ஆண்டுகளின் எண்ணிக்கையைக்கொண்டு ஆராய்ச்சி செய்வதால் பயனில்லை. கடந்த 35 அல்லது 40 ஆண்டுகளின் எண்ணிக்கையைக் கொண்டே கணித்தல் வேண்டும். நீரின்மையாலேயே குளங்கள் வற்றிவிட்டதாக எண்ணுவது அறிவீனம் குளங்களில் சேறு அடைந்து தோண்டப்படாதிருத்தலினாலேயே நீர் உட்புகமுடியாது பல குளங்கள் சீரழிந்துள்ளன. ஆனால் விவசாய அபிவிருத்தியேற்பட்டுள்ள இன்று குளங்கள் விவசாயிகளின் தேவையைப் பூர்த்திசெய்யவேண்டியநிலையிலுள்ளதால் கிராமசபைகள் சேறுகளைத் தோண்டிவருகின்றன.

மழை காலங்களில் வெள்ளங்களை வெட்டிவிடாது தடுப்பதினாலும், நீர்த்தேக்கங்களில் அணைகள் கட்டுவதனாலும் நீரைப் பாதுகாக்கலாம்.''

மேற்கண்டவாறு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய புவியியல் மாணவர் மன்ற கருத்தரங்கில் பேசுகையில் சைவப்புலவர் சி. மகாலிங்கசிவம் கூறினார்.

செல்வி க. புவனேஸ்வரி தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. புவியியல் விரிவுரையாளர் திரு. டபிள்யு. ஆர். அருளையா ஆசிரியர் திரு. வேலாயுதம், செல்வன் சுப்பிரமணியம் ஆகியோரும் பேசினர்.

## மே. வங்காளத்தின்....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கம் விழுந்துவிட்டதென மனவருத்தம்தெரிவித்தார். ஆனால், அரசாங்கத்தின் வீழ்ச்சி தவிர்க்கமுடியாதவொன்று என அவர் குறிப்பிட்டார்.

ஆங்கிலோ—இந்திய தலைவரான திரு. பிராங் அந்தோனி, எம். பி., மந்திரிசபை கலைப்பு எப்போதே நடைபெறவேண்டிய அலுவல் எனக் குறிப்பிட்டார்.

பாரதீய கிராந்திய தள்ளின் தலைவரான பேராசிரியர் ஹுமெயின் கபீர், புதியமந்திரிசபை ராஜ்ய மக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்துமென நம்பிக்கை தெரிவித்தார்.

அகில இந்திய காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜ், மந்திரிசபை கலைப்புப்பற்றி எதுவும் குறிப்பிட மறுத்துவிட்டார்.

ராஜ்யசபை உப தலைவரான திரு. எஸ். எம். மிஸ்ரா, மந்திரிசபை கலைக்கப்பட்டதை வரவேற்றார்.

## ஒரு மாதம் கடுழியம்

குரும்பசிட்டி, புதன்

அநுராதபுரத்தைச் சேர்ந்த ஆர். சின்னப்பன் அல்லது பெருமாள் என்ற ஐ. ஆர். பி. ஒருவருக்கு மல்லாகம் நீதிபதி ஒரு மாத கடுழிய சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார். முன்னர் ஒரு வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட இவர் குறிப்பிட்ட சில தினங்களில் பொலிஸ் நிலையத்தில் ஆஜராகும்படி உத்தர விடப்பட்டிருந்தார். இவ்வுத்தரவை மீறி நடந்த இவரை புகையிரதத்தில் பிரயாணம் செய்து கொண்டிருக்கையில் பொலிசார் கைதுசெய்து மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

## சித்தியடைந்த ஒரே மனிதர்

சுளிபுரம், புதன்

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி ஆசிரியரான திரு ஏ. கே. இராமச்சந்திர சர்மா பீ. ஏ சிறப்புப் பரீட்சையில் சமஸ்கிருத பாடத்தில் விசேஷ திறமையுடன் சித்தியடைந்துள்ளார் இவ்வாண்டு சமஸ்கிருத பாடத்தில் சித்தியடைந்தவர் இவர் ஒருவரே என்பது குறிப்பிடத்தக்கது.

## இடமாற்றம்

சாவகச்சேரி, புதன்

கடந்த 7 வருடங்களாக வடபகுதி புகையிரதப்பகுதியில் எஞ்சின் சாரதியாகக் கடமையாற்றிய திரு. எம். இரத்தினசிங்கம் அடுத்த வருடம் ஜனவரி 9-ம் திகதி முதல் நாவலப்பிட்டிக்கு இடமாற்றலாகிச் செல்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பொலிஸ் கோஷ்டியை கொக்குவில் இந்து வென்றது

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் பொலிஸ் உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரி உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற ஒரு பெரும் மோதலில் கொக்குவில் இந்துக் கோஷ்டியினர் பொலிஸ் கோஷ்டியை வென்றனர்.

யாழ்ப்பாணம் விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டி ஆரம்பத்திலிருந்து முடிவுவரையும் அருமையாகவே காணப்பட்டது. இடைவேளைக்கு முன்னர் நடைபெற்ற ஆட்டத்தில் கொக்குவில் இந்துக்கோஷ்டியின் பாராட்டுக்குரிய 'பாசிங்' ஆட்டம் கட்டத்துக்குக்கட்டம் பொலிசாரை திணறடித்துக் கொண்டிருந்தது. இதனால் கொக்குவில் இந்துவுக்கு அதிகமான கோலடிக்கும் சந்தர்ப்பங்கள் கிடைத்துக் கொண்டிருந்தன. ஒரு சந்தர்ப்பத்தில் கொக்குவில் இந்துவின் முன்னணி வீரரான ஜீவராசாவிடம் மின்னல் வேகத்தில் பந்து பாஸ் பண்ணப்பட்டது. அந்தரத்தில் வந்த பந்தை அபாரமாகக் கொண்டுசென்ற ஜீவராசா அதை அருமையான அடி போட்டு ஒரு கோலாக்கினர்.

இப்போட்டியில் முதல் முறையாகப் போட்ட இந்த வெற்றிக்கோலுக்கு ரசிகர்களின் பலத்த 'அப்பிளாஸ்' கிடைத்தது. குறிப்பிடத்தக்கது. இடைவேளையின் போது பொலிஸ் கோஷ்டியினர் ஒரு கோலும் போடாதவகையில் கொக்குவில் இந்து ஒரு கோல்பெற்றிருந்தது.

இடைவேளைக்குப் பின்னர் நடைபெற்ற ஆட்டம் கடுமையானதாகவே காணப்பட்டது. புது உற்சாகத்துடன் மோதிய பொலிசார் விட்டுக்கொடுக்காமல் நன்ருக ஆடி கொக்குவில் இந்துவுடன் பெரும் பலப்பரீட்சையில் இறங்கினர். இரு சாராரும் இக்கட்டங்களில் சுறுசுறுப்பாக ஆடியதனால் போட்டியும் விறுவிறுப்பாகவே காணப்பட்டது. பொலிஸ் கோஷ்டியின் பின்னணி வீரர்களின் அதிரடிகள் அபாரம். ஒரே அடியில் பந்தை எதிர்க்கோஷ்டிப்பக்கம் திருப்பிக்கொண்டிருந்தனர். எனினும் பொலிஸ் முன்னணி வீரர்கள் தமக்குக்கிடைத்த கோல்கள் போடும் சந்தர்ப்பங்களைத் தவறவிட்டுக் கொண்டேயிருந்தனர். இப்போட்டி முடிவில் கொக்குவில் இந்து 1—0 கோலால் பொலிஸை வென்றது.

(வி. நி.)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணப் பாடசாலை விளையாட்டுச்சங்கத்தின் ஆதரவில் யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும், கொக்குவில் இந்துக் கல்லூரிக்குமிடையேயான முதலாம் பிரிவு ஏ டிவிஷன் மோதல் நடைபெறும்.

ஃ ஃ ஃ

தீவுப்பகுதி உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் மேற்படி சங்க மைதானத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் 'லேடன்' வெற்றிக் கேடயத்துக்கான கழகங்களுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று மாலை மண்டதீவு ஐக்கிய விளையாட்டுக்கழகமும் காரைநகர் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொள்ளும். வி.நி

# 'வேலை நேரங்களில் காணமுடியவில்லையே'

## ஆசிரியர்பற்றி கல்வி அமைச்சர் கவலை

கொம்பனித்தெரு, புதன்

கல்லூரி அதிபர்களும் தலைமையாசிரியர்களும் கடமை நேரங்களில் பாடசாலைகளில் இருக்காது தங்கள் சொந்தவேலைகளைப் பாடசாலை நேரங்களில் பார்த்து வருகின்ருர்கள் என்றும் இப்படியான செயல் மிகவும் பாரதூரமான செயல் என்றும் கல்வி அமைச்சர் திரு ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை தெரிவித்தார்.

கடமை நேரமான ஐந்து மணித்தியாலங்களில் கூட அவர்கள் தங்கள் சொந்த வேலைகளிலேயே ஈடுபட்டு வருவது மிகவும் வருந்தத்தக்க செயலாகும் என்றும் கல்லூரி அதிபர்களும் தலைமையாசிரியர்களும் தங்கள் கடமையைச்சரிவரச் செய்கிருர்களில்லை என்றும் வேலை நேரங்களில் அவர்களைப் பாடசாலைகளில் காணமுடியாதிருக்கிறது என்றும் இது சம்பந்தமாக பொதுமக்களிடமிருந்துபல புகார்கள் கிடைத்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதைத் தொடர்ந்து கல்வி அமைச்சர் இத்தகையவர் மீது நடவடிக்கை எடுக்க விரும்புவதாகத் தெரியவிருகிறது,

மாவட்டக் கல்வி அதிகாரிகள் வட்டார வித்தியாதரிசிகள் நாட்டின் சகல பாடசாலைகளுக்கும் எவ்வித முன்னறிவித்தல்கள் இன்றி விஜயம் செய்து கல்லூரி அதிபர்கள் தலைமை ஆசிரியர்கள் தங்கள் கடமைகளைச்சரிவரச் செய்கிருர்களா என்று நேரில் சென்று கண் காணிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருக்கிறது.

## ஆலையில் அரைபட்டது அரிசிக் கூப்பன்கள்

திருக்கோணமலை, புதன்

திருக்கோணமலையிலிருக்கும் அரிசி ஆலையொன்றில் கூப்பன்களும் அரைபட்டனவாம்.

அரிசிக்குள் கூப்பன்கள் கிடந்தது தெரியாமல் அரிசி தீட்டும் ஆலையில் கொட்டப்பட்டபோதே இச்சம்பவம் நடந்ததாகத் தெரியவருகிறது.

# 'போட்டி பூசலிலிருந்து இளைஞரை காப்பாற்றுங்கள்'

கொம்பனித்தெரு, புதன்

''நாட்டில் இப்பொழுது போட்டியும், பூசல்களும் பொருமையும் தாண்டவமாடிக்கொண்டிருக்கிறது. இந்தப் போட்டிபூசல்களிலிருந்து இளைஞர்களைக் காப்பாற்றப் பெரியவர்கள் முன்வரவேண்டும்.''

இவ்வாறு ரேயல்கல்லூரி இந்து மாணவர்களினுல் ஒழுங்குசெய்யப்பட்ட பதினைராவது வருடாந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய கல்லூரி அதிபர் திரு. வோ. குலபிரமரத்தினு கூறினுர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''பெரியவர்கள் தமது பொறுப்புக்களை மறந்து விடக்கூடாது. மாணவரின் குற்றங்களை மட்டும் பெரிதாக்கிக் கொண்டிருப்பதால் நன்மை விளைந்துவிடமுடியாது. இளைஞர்களை நல்வழிப்படுத்தும் பொறுப்பு பெரியவர்களைச் சார்ந்தது என்பது உணரப்படவேண்டும்.''

## நோயாளிகள் கஷ்டம்

சங்கானை, புதன்

சங்கானை அரசினர் ஆஸ்பத்திரியில் கடந்த பல காலமாக டாக்டர் ஒருவரும் இரண்டு அப்போதிக்கரிமார்களும் கடமையாற்றிவருகிருர்கள். இவர்களில் டாக்டரும் உதவி அப்போதிக்கரியும் றிலீவ் டியூட்டியில் வேறிடங்களுக்கு அனுப்பப்பட்டு வருவதால் இங்கு செல்லும் நோயாளர் மருந்து வாங்குவதற்குப் பல மணித்தியாலங்கள் காத்து நிற்கவேண்டிய கஷ்டநிலை ஏற்பட்டுள்ளது.

இதன்காரணமாகச் சங்கானைப் பட்டினசபைத் தலைவர் திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலம் மேற்படி டாக்டரையும் அப்போதிக்கரியையும் நோயாளர் நலன் கருதி வேறிடங்களுக்கு றிலீவ் டியூட்டியில் அனுப்ப வேண்டாமென யாழ்ப்பாண மாவட்ட சுகாதார அத்தியட்சகரிடம் கோரியுள்ளார். ——

# நெசவு சமாஜம் செய்யும் சேவை

புலோலி, புதன்

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 3,147 கைத்தறிகளில் 2,434 கைத்தறிகளுக்குத் தேவையான நூல் மற்றும் தளபாடச் சாமான்களையும் யாழ்ப்பாண ஐக்கிய நெசவுச் சமாஜமே வழங்கிவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் கூடுதலாக இருக்கும் பகுதிகளில் கிளைத்தாபனங்களை நிறுவுவதற்குச் சமாஜம் உத்தேசித்துள்ளதாகவும் முதன்முதலாக வடமராட்சியில் ஒரு கிளைத் தாபனத்தையும் பின்னர் மற்றும் பகுதிகளில் கிளைகளை நிறுவவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

மிக விரைவில் ஒரு சாயத் தொழிற்சாலை சமாஜத்திற்குச் சொந்தமான கோண்டாவிலில் உள்ள காணியில் நிறுவுவதற்கு வேண்டிய சகல ஏற்பாடுகளும் இப்போது நடைபெறுவதாகவும் தெரியவருகிறது.

## வயோதிபர் தற்கொலை

புலோலி, புதன்

துன்னலை தெற்கில் வசித்துவந்த சிதம்பரியார் சிவசம்பு [60 வயது) என்பவர் கடன் தொல்லை காரணமாக நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலைசெய்து கொண்டார்.

மரண விசாரணை நடாத்திய மரண விசாரணை அதிகாரி திரு. இராமநாதன் தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

## கோவில் உண்டியல் திருட்டு

உடுப்பிட்டி, புதன்

நெல்லியடிப் பிள்ளையார் கோவில் உண்டியல் [illegible] டுப்போய் வி[illegible] யப்படுகிறது.

# வானொலி நிகழ்ச்சிகள்

## சென்னை - 1

### வியாழன் 23 - 11 - 67

காலை 6-00 - வந்தேமாதரம், 6-05- துதிப்பாடல்கள் 6-30 நிகழ்ச்சிக்குறிப்புகள். 6-35 அருள்வாக்கு, 6-45 மறைவழி, 6-55 அஹிம்சையின் குரல், 7-00 வாத்தியஇசை, 7-15 தமிழில் செய்தி, 7-30 பாட்டு, 8-15 பாட்டு, 8-45 கீதமஞ்சரி, 9-15 வீணை, 9-45 சங்கத் தமிழ்கீழ்க் கணக்கு நூல்கள் — எம் இராஜமாணிக்கம், 10-00 பாட்டு, 10-55 ஆங்கிலத்தில்செய்தி, 11-55 பிராந்தியச்செய்திகள்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 கல்வி ஒலிபரப்பு, 1-00 வீணை, 1-30 வாத்தியகோஷ்டி, 1-45 திரைகானம், 2-00 தமிழில் செய்தி.

மாலை 5-30 மெல்லிசை. 5-45 கிண்கிணிமண்டபம்— சித்திரம்.

இரவு 6-05 பிராந்தியச் செய்திகள், 6-30 வாத்திய இசை, 6-45 திரைகானம், 7-15 தமிழில் செய்திகள், 7-30 நம்விவசாயிகளுக்கு, 8-00 பாட்டு, 9-00 ஆங்கிலத்தில் செய்தி, 9-15 இசைக்கோலம், 9-30 ஆங்கில பாரத நாடகம்.

## திருச்சி - 1

காலை 6-30 வந்தேமாதரம், 6-40 ஆங்கிலத்தில் செய்தி, 6-50பக்திப்பாடல், 6-55 அறஉரை, 7-00 துதிப்பாடல்கள், 7-15 தமிழில் செய்தி, 7-30 இராமலிங்க சுவாமிகள் — திருவடிப் புகழ்ச்சி 8-00 ஆங்கிலத்தில் செய்தி, 8-15 பாட்டு, 11-55 பிராந்தியச்செய்திகள்.

பகல் 12-00தொழிலாளர்களுக்கு, 12-30 கல்வி ஒலிபரப்பு, 1-00 திரைப்பட இசை, 1-30 ஆங்கிலத்தில் செய்தி, 2-00 தமிழில் செய்தி.

மாலை 5-00 பாட்டு, 5-30 திரைப்பட இசை. 5-45 கிண்கிணிமண்டபம்— தொடர் சித்திரம்.

இரவு 6-05 பிராந்தியச் செய்திகள், 6-15 கலைக்கூடம், 6-30 ஊர்ச்சாவடி, 6-35 இசைமஞ்சரி, 6-45 சிறுவர் கண்ட சிவனடியார், 7-15 தமிழில்செய்தி, 7-30 விவசாயிகளுக்கு, 8-00மெல்லிசை, 8-15 தமிழ் வளர்த்த பெரியார்கள், 8-30 டெல்லி அஞ்சல், 8-40 இசைமாலை, 9-00 ஆங்கிலத்தில் செய்தி, 9-15 திரைப்படமெட்டுகள், 9-30 [illegible] ஆங்கிலத்தில் செய்தி.


# மிளகாய் நோய்

BAYER

தற்பொழுது மிளகாய்ச் செடிகளைப் பாதிக்கும் தூசி பூஞ்சணவன் கீழ்ப்பக்கபூஞ்சணவன் வியாதியினுலும் குருமன் நோய் அல்லது இலை சுருள் வியாதியிலிருந்து காப்பாற்ற

குப்ருவிற் (செப்புப் பங்கசு கொல்லி)

மெற்றசிஸ் டொக்ஸ் 'ஆர்'

ஆகிய இரண்டையும் கலந்து தெளிப்பது நலம். 1000 கண்டு தறைக்கு 10 கலன் நீரில் 4 அவுன்ஸ் குப்ருவிற் 2 திராவக அவுன்ஸ்மெற்றசிஸ் டொக்ஸ் கலந்து தெளித்தல் வேண்டும்'

★ எல்லாப் பயிர்களுக்குத் தேவையான மற்றும் பூச்சி, காளான், களை சொல்லிகள்.

பொலிடோல். மெற்றசிஸ்டொக்ஸ், லேபேசிட், மட்டாசில், பொலித்தியோன், டிப்ரறெக்ஸ், குப்ருவிற், செரசான், பேர்பாம், டக்தல், ஹெடோனல் ''எம்'', ஹெடோனல் ''டி''. சேர்ஜோப்பூர் 36%.

ஏகவினியோகஸ்தர்:

HAYLEYS

ஹேலீஸ் லிமிட்டெட்
400, டீன்ஸ் ரேட்,
கொழும்பு—10.

கிடைக்குமிடங்கள்:

(1) புரேவின்ஷல் டிஸ்றிபியூட்டர்ஸ்,
ஓட்டோஸ் கட்டிடம்,
யாழ்ப்பாணம்.

(2) வடபகுதி விவசாய உற்பத்தியாளர்கூட்டுறவுச் சமாசம்
111, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனிதவதி கொலைவழக்கு

# 'தேவதாஸூம் நானும் கடிதங்கள் பரிமாறிக் கொண்டோம்'

## கொலையுண்டவரின் வீட்டில் வசித்த இளம்பெண் சாட்சியம்

குரும்பசிட்டி, செவ். "இறந்தவரான புனிதவதி எமக்கு உறவினரல்ல. எனது பெற்றோர்கள் மத்தியில் ஏற்பட்ட பகைமை வேறுபாடுகள் காரணமாக கடந்த ஏழு வருட காலமாக தகப்பனார் எம்மை விட்டுப் பிரிந்து வாழ்க்கை நடத்துகின்றார். தகப்பனாரின் தற்போதைய இருப்பிடம் பற்றி எமக்கு எதுவும் தெரியாது. நானும் தயாரும் தங்கையான உமாதேவியும் சுழிபுரத்திலுள்ள எமது வீட்டில் வசித்து வருகின்றோம். எனது வீட்டிற்கு அருகாமையில் சிகை அலங்கரிப்பு நிலையமொன்று உண்டு. இந்த நிலையத்தில் தொழில் புரியும் தேவதாஸ் என்ற வாலிபருடன் நான் தொடர்பு வைத்துள்ளேன். இவ் வாலிபரை நான் மனதாரக் காதலித்து வருகின்றேன். நாம் இருவரும் பரஸ்பரம் காதல் கடிதங்கள் பரிமாறிக்கொண்டு வந்துள்ளோம். எம்மிடையே நிலவிய நட்புறவுகள் பற்றி கிராமத்தவர் அறிந்திருந்தனர். எமது உறவினர்கள் இதுபற்றி எதிர்ப்புத் தெரிவித்தனர். வேறு நபர்களின் உதவியுடன் என்னைக் கடத்திச் சென்று உறவினரில் ஒருவருக்கு திருமணம் செய்து வைக்க உறவினர் முயற்சிகள் செய்வதாக எனது அம்மாவுக்குத் தெரிய வந்தது. இந்த நடவடிக்கையைத் தடுப்பதற்காகவும் எனது பாதுகாப்பிற்காகவும் காலஞ்சென்றவரது வீட்டில் வசிப்பதற்கு எனது அம்மா ஏற்பாடு செய்திருந்தார்."

மல்லாகம் மாஜிஸ்டிரேட் திரு. ரி. எஸ். நிற்சிங்கா முன்னிலையில் புனிதவதி கொலை வழக்கு இன்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சாட்சியமளித்த பற்குணதேவி பெரியதம்பி [வயது21] என்னும் இளம் பெண் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பற்குணதேவி தமது சாட்சியத்தின்போது மேலும் கூறியதாவது: — கொலையுண்டவரின் மகளான சிவஞான திருவை சுமார் இருவருடகாலமாக எனக்குத் தெரியும். தொல்புரத்திலுள்ள தையல் நிலையத்துக்கு தையல் பழக சென்று வந்ததால் சிவஞானதிருவுடன் சினேகிதமானேன். சம்பவம் நடப்பதற்கு முன்னர் மூன்று வாரங்களாக இறந்தவரின் வீட்டில் வசித்தேன். இக்காலத்தில் என்னைச் சந்திப்பதற்கு மயில்வாகனம் 3 தடவைகள் இவ்வீட்டிற்கு வந்துபோயிருக்கிறார். மயில்வாகனத்தை நான் அண்ணன்' என அழைப்பேன்

தொல்புரத்தைச் சேர்ந்த புனிதவதி கைம்பெண் சுப்பிரமணியம் (45வயது) என்னும் பெண்ணைக் கொலை செய்ததாக சங்கானைப் பொலிசாரால் அறுவருக்கு எதிராக இவ் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. எதிரிகளைத்தொடர்ந்து ரிமாண்டில் வைக்க உத்தரவிட்ட நீதிபதி மேல் விசாரணையை டிசம்பர் மாதம்2ந் திகதிக்கு ஒத்திவைத்தார். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு, ஆர்' ஜே. செல்வரத்தினம் ஆஜரானார்.

### தமிழ் தட்டச்சு பரீட்சை முடிவு

வெள்ளவத்தை, செவ்வாய் இவ்வருடம் ஆகஸ்டுமாதம் நடைபெற்ற அரசாங்க தமிழ் தட்டெழுத்தாளர் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன. இவ்வருடமும் யாழ்ப்பாணம் அரசினர் கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரி (கொக்குவில்) யைச் சேர்ந்த பல மாணவர்கள் இப்பரீட்சையில் தேறியிருப்பது. குறித்து கொழும்பிலுள்ள யாழ் கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரிப் பழைய மாணவர்கள் சங்கம் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

### அரிசி விலையேற்றம்

வேலணை, புதன் வேலணைப்பகுதியில் உள்ள கடைகளில் நாட்டரிசியின் விலை 1ரூபா 40 சதமாக உயர்ந்துள்ளதாகத் தெரிகிறது.

### துப்பறியும் நிபுணர்

கொழும்பு, செவ். சர்வதேச துப்பறியும் நிபுணர்கள் ஸ்தாபனத்தில் முதலாவது ஆசியாக்காரராக இலங்கையைச் சேர்ந்த துப்பறியும் இலாக பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஜே. ஏ. செல்வரட்ணம் சேர்க்கப்பட்டுள்ளார்

### போக்குவரத்து பாதிப்பு

அளவெட்டி, புதன் நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து காங்கேசன்துறை சீமெந்துச்தொழிற்சாலையில் சிமெந்துபெற்றுக் கொள்ளவந்த லொறிகள் சிமெந்துத் தொழிற்சாலை வளவுக்குள் நிறுத்துவதற்கு அனுமதிக்காத காரணத்தால் நூற்றுக்கு மேற்பட்ட லொறிகள் தொழிற்சாலை வாசல் முதல் மாவிட்டபுரம் வரையும் பிரதானவீதியில் நிறுத்தப்படவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக இவ் வீதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

### சமய, தேச தலைவர்கள் விழா

சுழிபுரம், புதன் வழக்கம்பரை பஜனை சபையினர் ஆறுமுகநாவலர், ஜனாதிபதி கெனடி ஆகிய பெரியார்களின் நினைவாக அவர்களின் நினைவுதினத்தை எதிர்வரும் வெள்ளிக்கிழமை வழக்கம்பரை அம்மன் கோவிலில் நடைபெறும் கூட்டுப் பிரார்த்தனையின் போது கொண்டாடவிருக்கின்றனர்.

கெனடியைப் பற்றி திரு. சண். கந்தையாவும், நாவலரைப் பற்றி பண்டிதர் ப. இராசகுருவும் உரை நிகழ்த்தவிருக்கடீர்கள்.

### கிராம சபைக்கு புதிய அலுவலகம்

குரும்பசிட்டி, புதன் ஏழாலை கிராமசபையினர் சுமார் 33 ஆயிரம் ரூபா செலவில் புதிய அலுவலகம் ஒன்றினை நிறுவவிருக்கின்றனர். இதற்கான அத்திபாரக் கல்லை உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. எஸ். வி. மாணிக்கவாசகர் நாட்டி வைத்தார். அடிக்கல்நாட்டு விழாவையொட்டி கிராம சபைதலைவர் திருகே. சிவகுரு தலைமையில் பகிரங்கக் கூட்டமும் நடைபெற்றது.

### இராமநாதன் நினைவுதினம்

கொம்பனித்தெருபுதன் சேர் பொன் இராமநாதனின் நினைவு தினத்தை கொழும்பில் கொண்டாடுவதற்கு விவேகானந்த சபையினர் ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் நடைபெறவிருக்கும் நினைவுதினக் கூட்டத்துக்கு சுகாதார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. சி, பாலசிங்கம் தலைமை தாங்கவிருக்கிறார். பிரதம பேச்சாளர்களாக செனட்சபைத் தலைவர் டாக்டர் இ. ரத்நாயக்கா நீதியரசர் டாக்டர் எச். டபிள்யூ தம்பையா, நீதியரசர் வி. சிவசுப்பிரமணியம், வழக்கறிஞர் திரு. விக்ரம நாயக்கா ஆகியோர் கலந்து கொள்ள விருக்கின்றனர்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

மானிப்பாய் கிராமசபை

## அடுத்த ஆண்டு சோலைவரி அறவிடப்படும்

மானிப்பாய், புதன் மானிப்பாய் கிராமசபை அடுத்தஆண்டு முதல்சோலை வரியை அறவிடவிருக்கிறது: மின்சாரப்பகுதி நஷ்டத்தில் இயங்கி வருவதாகவும் 1958-ம் ஆண்டில் அரசாங்கத்திடம் எடுத்துள்ளகடனை இதுவரை செலுத்த இயலாது இருந்து வந்துள்ளதெனவும் இவ்வருடமே அக்கடனில் ஒரு பகுதியாக ரூபா. 31,217-08சதத்தை கொடுத்துள்ளதெனவும்இவ் விதம் வருடாவருடம் கடனைச் செலுத்துவதற்குச் சோலைவரியை அறவிடுதலைவிட உகந்தவருமானம்வேறில்லையெனவும் சபைகருதுகின்றது.

அண்மையில் நடைபெற்ற மேற்படிசபையின் கூட்டத்தில் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்ட அடுத்த ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தில் வரவு 37,298-60 எனவும் மிஞ்சக் கூடிய தொகை 3918-60 எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கூட்டத்திற்கு சபைத்தலைவர் திரு. எஸ். மார்க்கண்டு தலைமை வகித்தார்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு நவம்பர் மாதம் 23-ந்திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

திருக்கோணமலை கடிதம்

# பலநோக்கு கூட்டுறவு சமாஜத்தின் சாதனை

திருக்கோணமலை பலநோக்குக் கூட்டுறவு சமாஜ சங்கம் 1965—1966-ம் ஆண்டுக்கான கணக்குகளின் பிரகாரம் இச்சங்கத்தின் அங்கத்தவர்கள் யாவருக்கும் தலா 6 சத வீதம் அதிக லாபப்பணமும் இச்சங்க ஊழியர்கள் அத்தனைபேருக்கும் 1 மாத முழுச் சம்பளத் தொகையை 'போனஸ்' பணமாகவும் கொடுத்துள்ளது.

கூட்டுறவுச் சங்கங்கள் இப்படியான அதிக லாபத்தை ஈட்டிக்கொள்வது குதிரைக் கொம்பாக இருக்கும் இக்காலத்தில் இச்சங்கத்தின் இந்த அரிய சாதனைக்கு இச்சங்கத்தின் தலைவரான திரு. கோணமலை சங்கரதாஸின் அயராத உழைப்பும், இவர் பிறநாடுகளுக்குச் சென்று பெற்ற அனுபவமும் பயிற்சியுமே காரணங்களாக இருக்கின்றன எனப் பேசிக்கொள்ளப்படுகிறது.

### பிரிட்டனின் நாணய மதிப்பும் தேயிலை ஏற்றுமதியும்

பிரிட்டனில் நாணய மதிப்பு குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து திருக்கோணமலைத் தேயிலை நிர்வாக ஸ்தாபனத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. பிரிட்டனுடன் இந்த ஸ்தாபனம் பல நேரடித் தொடர்புகளைக் கொண்டிருப்பதே இதற்குக் காரணம். இலங்கைத் தேயிலையில் பெரும் பகுதியானவை பிரிட்டனின் துறைமுகங்களான லிவர்ப்பூல், எவண்மவுத், மான்செஸ்டர் ஆகியனவற்றுக்கு ஏற்றுமதியாக்கப் பட்டுவருகிறது. கொழும்பு ஏலவிற்பனையில் கொள்முதல்செய்யப்படும் தேயிலையும் இந்தத் துறைமுகங்களுக்கே அனுப்பப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

### ஓய்வுபெறுகிறார்

திருக்கோணமலை துறைமுகப் பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த சப்-இன்ஸ்பெக்டர் திரு. வி. கணபதிப்பிள்ளை அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 1ந் தேதியிலிருந்து தமது பதவியிலிருந்து ஓய்வுபெற்றுக்கொள்ளுவார். யாழ்ப்பாணம் சித்தங்கேணியைச் சேர்ந்த இவர் இளவாலை சென்ற் ஹென்றீஸ் கல்லூரியின் பழைய மாணவராவார். பின்பு கோலாலம்பூர் சென்று மேற்படிப்புப் பெற்றுத் திரும்பி இலங்கைப் பொலிஸ் இலாகாவில் கடந்த 30 ஆண்டுகள் சேவை புரிந்துள்ளார். தாம் பதவியிலிருந்து ஓய்வுபெறுவதற்கு முன்பாக இன்று முதல் லீவில் செல்லப்போவதாக அவர் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாட்டுவண்டி-பஸ் விபத்து

# டிப்போமனேஜர்செய்கைக்கு நீதிபதி கண்டனம்

## விசாரணை ஒத்திவைப்பு

முல்லைத்தீவு, புதன் "விபத்து நடந்த ஒருவர் காயமடைந்து கிடப்பதை அறிந்தும் நீர் அதைக் கவனியாது, விபத்துக்குள்ளான பஸ்ஸில் பிரயாணம் செய்தவர்களை அப்புறப்படுத்த வேறொர்பஸ்ஸை அனுப்பியது வேடிக்கையானது. பிரயாணிகளை சாட்சி சொல்வதிலிருந்து தடுக்கவே இவ்வாறு செய்யப்பட்டுள்ளது. இ.போ.ச. பஸ்கள் விபத்தில் சிக்கினால் இப்படி நடப்பதுதான் வழக்கம். இது பற்றி மேலதிகாரிகளுக்கு அறிவிக்கின்றேன்" என முல்லைத்தீவு அடிஷனல் மாஜிஸ்டிரேட், முல்லைத்தீவுமுதலாவதுமைலில் நடந்த பஸ்-மாட்டுவண்டி விபத்து சம்பந்தமான விசாரணையின் போதுசாட்சியமளித்த முல்லைத்தீவு இ.போ.ச. டிப்போ மனேஜர் திரு. செல்லப்பா சோமசுந்தரத்தைக் கண்டித்தார். இவ்விபத்தில் மாட்டு வண்டியை ஓட்டிவந்த சாரதியான முகமதலிசாகுல்ஹமீதுவும் இருமாடுகளும் விபத்து நடந்த இஸ்தலத்திலேயே மாண்டது தெரிந்ததே.

"நான் சனிக்கிழமைஇரவு 11மணியளவில் டிப்போவுக்கு வந்து கொண்டிருந்த போதுபஸ் கண்டக்டர் கணபதிப்பிள்ளை வந்து மாட்டுவண்டி ஒன்றுடன் பஸ்மோதி ஒருவர காயமடைந்ததாகக் கூறினார். நான் உடனே டிப்போவில் நின்ற ஒரு பஸ்சை அனுப்பி விபத்து நடந்த இடத்தில் நின்ற விபத்துக்குள்ளான பஸ்ஸில் சென்ற பிரயாணிகளை ஏற்றிச் செல்லுமாறு அனுப்பிவிட்டுபின்பு பொலிஸில் சென்று முறையிட்டேன். அதன்பின்பு பொலிஸாருடன் ஸ்தலத்திற்குச் சென்று பார்த்த போது ஒருவர்றோட்டில் மரணமாகிக் கிடப்பதைக் கண்டேன்." என டிப்போமனேஜர் தமது சாட்சியத்தில் கூறினார்.

முல்லைத்தீவு பதில் வைத்திய அதிகாரி டாக்டர்எம். கோணேஸ்வரன் சாட்சியமளித்தபோது, காலம்சென்றவர் பஸ்ஸினால் தூக்கி வீசப்பட்டதால் ஏற்பட்ட காயங்களினால் மரணமானார்என்றும், ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இரண்டு மணிக்கு சந்தேக நபரான சாரதி ஐயாத்துரை குலசேகரத்தைதாம் பரிசோதனை செய்தபோது அவரிடம் மதுவாடை வீசியதாகவும் கூறினார்.

நீதிபதி சந்தேக நபரை 22ம் திகதிவரைறிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டு மேல் விசாரணையை 22-ம் திகதிவரை ஒத்திவைத்துள்ளார்.

### பெற்றோர்ஆசிரியர் சங்கம்

வேலணை, புதன் வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை பெற்றோர் ஆசிரிய சங்கத்தின் பொதுக் கூட்டம் வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சைவப் பிரகாச வித்தியாசாலையை மத்திய மகாவித்தியாலயத்துடன் இணைக்கும் அரசினரின் நடவடிக்கை பற்றி ஆலோசிக்கப்பட்டது. அரசினரின் முடிவை சங்கம் ஏற்றுக்கொண்டது.

இச்சங்கத்தின் புதியஉத்தியோகத்தர் பின்வருமாறு: தலைவர்: திரு. ஏ. வைரமுத்து, உபதலைவர்; திரு. பி. கேதாரநாதன், செயலாளர்: திரு. எஸ். கந்தையா, இணைச்செயலாளர்: திரு. என். வீரசிங்கம், தனாதிகாரி: திரு. கே. ஆறுமுகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org